# புன்னகைப் பூக்கள்

(புனைகதை)



முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

**முனைவர் பி. தமிழகன்**

# புன்னகைப் பூக்கள்

(புனைகதை)

முதுமுனைவர்
இரா. இளங்குமரனார்

பதிப்பாசிரியர்
முனைவர் பி. தமிழகன்

## நூல் விளக்கம்

நூற்பெயர் : **புன்னகைப் பூக்கள்**

ஆசிரியர் : இரா. இளங்குமரனார்

முதலாம்பதிப்பு : சுறவம் தி.பி. 2051 (கி.பி. 2020 பிப்ரவரி)

உரிமை : ஆசிரியருக்கு

தாள் : 18.6 மேப்லித்தோ

அளவு : தெம்மி 1/8

பக்கம் : 96

படிகள் : 300

விலை : உருவா 60/-

நூலாக்கம் : தி பிரிண்டிங்கு அவுசு
திருச்சிராப்பள்ளி - 23
0431 - 2420121

வெளியீடு : திருவள்ளுவர் நிலையம்
7, இராமன் தெரு, திருநகர்,
மதுரை - 625 006
94427 60616

கிடைக்குமிடம் : **திருவள்ளுவர் நிலையம்**
&
**பி. தமிழகன்**
2, பிச்சையம்மாள் நகர்
காசாமலை
திருச்சிராப்பள்ளி - 23
99407 04702.

# உவகைப் பெருக்கு

**ஆக்கமிக்க போட்டி,** தனிமாந்தர் முதல் உலகுக்குத் தேவை. **அழிவுக்கு ஆட்படுத்தும் போட்டி**யைத் தொடங்கியவன் தன்னழிவையே முதற்கண் சந்திப்பான். உலகம் கற்பிக்கும் உயர்கல்வி இது! தீராத் துயரில் மக்கள் மடியத் தேர்ந்த **அறிவியலும், அழிவியலே!** வீட்டில் கமழும் நறுமணம் வீதிக்கு வர வேண்டும். வீதியாரும் தம் வீட்டில் அந்த மணம் கமழச் செய்ய வேண்டும்!

**பூவின் நகையினும் பொன்னின் நகையிலும் புன்னகை உயர்வானது.** நாள் அளவில் மணந்து ஒழியாது! திருடனை வாவென அழையாது! **புன்னகை வாழ்வு, கவலைக்கும், பிணிக்கும், இறப்புக்கும் தீர்வு!** அதனைச் செயற்பாட்டில் விளக்குவது **இப்புனைகதை!**

வறுமை, முதுமை, தனிமை எனத் தவிப்பார்க்கு இப்புன்னகைப் பூக்கள் வழிகாட்டக் கூடும். விளக்கு எனினும், ஏற்றினால் தான் ஒளி, சந்தனக் கட்டை எனினும், அரைத்துப் பூசினால் தான் நறுமணம். பன்னீர் எனினும், தெளித்தால் தான் பனிமையும் நறுமையும்! எண்ணிப் படிப்பார்க்குத் தண்ணிழலொடு நறுமணமும் ஊட்டும் இப்புன்னகைப் பூக்கள், புன்னகையில் தொடங்கிப் புன்னகையில் நிறைவது. இடை இடையும் புன்னகை தவழ்வது.

இதனை தம் புன்னகைப் பதிப்பாகச் செய்பவர் முனைவர் திருத்தகு பி. தமிழகனார்; என்றும் வனப்புடனும் காலக் கணிப்புடனும் தட்டாமல் செய்யும் திருச்சிராப்பள்ளி அச்சுக்குழுமத்தினர், தம் பெற்றோர் பெயரால் வைத்துள்ள அறக்கட்டளை வழியே தொடர்ந்து வெளியிட்டுதவும் பெருங்குணத் தோன்றல் தாமோதரனார், புன்னகை பொன்னகையில் பொலிவினதே எனப் புனைகதைப் பிழிசாறாக நயவுரை எழுதிய என் மகனார் கி. இளங்கோ ஆகியோர்க்கு நனிமிகு நன்றியுடையேன்!

பிறசொற் கலப்பின்றி, கொச்சை, வழு, கிரந்த எழுத்து ஆகியவை ஒன்றாமல் ஒதுக்கிக் கதை எழுத முடியும் என்றும், அக்கதைத் துய்ப்பாளர் பெருக உளர் என்றும், புனைகதை வரைவார் போலிமயக்கே கதைச் சுவைஞரைத் தாழ்த்துகிறது என்றும் என் புனைகதை வழியால் தெள்ளத் தெளிவாக உணர்கிறேன் என்பதைத் தெரிவித்து மிகவும் மகிழ்கிறேன்.

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

## புன்னகை, பொன்னகையிற் பொலிவினதே!

அப்பா, அவர்கள், முதுமுனைவர்; இலக்கியச் செம்மல்; அகராதிப்பணி ஆய்வுப்பணியின் தொடர்ச்சியர் – எனப் பன்முகப் படைப்பில், இதுவோர் புதுப்படைப்பாகப் 'புனைகதை' உலா வருகிறது; **புன்னகைப்பூக்கள், பொன்னகையில் பொலிவினதே!**

"இரு மனம் கலந்தது திருமணம்; இதனை, இருவர் வாழ்வு நலனுக்காக உடனே முடிவெடுக்காமல்", வீடுபோய்க் கலந்து பேசிச் சொல்லி விடுகிறோம் என்பதும், பெண்ணின் தோழி ஔவையார் போன்று தூது போவதும் அமைதித் தூதாம்;

கங்கை கொண்டாலும், மேட்டுக் குப்பமும் சோழனையும் வள்ளலாரையும் கண்முன் வருவிக்கின்றன. கதிர், மதி போட்டி உயர்ந்த போட்டி; **அழிவுப் போட்டி இல்லை ஆக்கப்போட்டி!** அல்லியில் வெள்ளை அல்லி காதல்; வாழ்வில் செவ்வல்லி இல்லறச் செம்மையாம்! 'அல்லி' திருமிகு. மு. வ – வை நினைக்க வைக்கிறது!

**"புகழும், தனமும் இருக்குமிடத்தில் எல்லாம் இருக்கும்", "புகழும் தனமும் சிறப்பது, மதியால் தானே!"** நல்ல உரையாடல் வள்ளலார் வழியில், மேட்டுக் குப்பத்தில் ஒளி முன் திருமணம். குடும்ப அளவில் எளிமையாக நடத்திவிட்டு, பின்னொரு நாளில் கங்கை கொண்டானில் வரவேற்பு என வைத்துக் கொள்வது சிக்கன நடவடிக்கையாம்.

**விரல்கள் நான்கும் சேர்ந்தால் தானே பெருவிரலுக்கு இணையாகும்; அவ்வாறே இணையாவோம் இதுவே வள்ளலார் கண்ட ஓதாக்கல்வியாம்; ஐந்து விரல்களுக்கும் ஒரே உள்ளங்கை, ஒரே உள்ளம்,** ஒரே உள்ளகம்; **ஒரே உள்ளகச் செய்கை** என விளக்கியதும் அருமை. ஐந்து விரல்களும் யார்? யார்? எனக்கூறுவது கூட்டுக் குடும்பச் சீர்மை விளக்கம்.

கதிர், மதி – இருவரிடமும் எந்தக்களங்கமும் இல்லை, "பெற்றவர்களை மகிழ்விக்க, நாம் மகிழ்வதுதான் முதல் கடமை" என்று

எண்ணும் பிள்ளைகளால், பெற்றோரும் முன்னை இல்லாத இன்ப அன்பு வடிவாகிக் கொண்டு வருவதை உணர்த்துவது குடும்ப நலப்பேறு; பெற்றோர் பார்த்த மணங்கள் யாவும் வெற்றி பெற்றனவா? இவை பலவும் ஒப்பிட முடியாத ஒட்டா ஒட்டாகவே பெருகிக் கொண்டுள்ளனவே! கதையின் நாயகனும் நாயகியும் ஆறு ஆண்டுகளாகப் பழகிய நண்பர்களாக இருந்து, "இந் நட்பு எங்களைப் புரிந்து கொள்ளவைத்துப் பெற்றோரைப் புரியவைத்து, பெற்றோர்கள் அவர்களைப் புரியவைத்து, மணமுடிக்க, பெற்றோருக்கு மாலை சூட்டி மணவிழாவில் மணமுடித்து உதிரிப்பூக்கள் தூவி, வாழ்த்த திருமணப் பரிசுடன் இம்மணவிழா இனிதே முடிகிறது !"

இதுபோன்று மணவிழாக்கள் இருமனமும் ஒருமனமாக இணைந்து வாழ்ந்தால், மணமுறிவு என்றும் முறை மன்றம் என்றும் செல்லவேண்டியிராவே. "நிறைவான வாழ்வே நிறைவான செல்வம், விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை", என்ற கூற்று மெய்யானதாம்!

கதையில் அங்கே அங்கே சிறு சிறு நகைச்சுவையுடன் தொடர்கிறது, "புன்னகை, கதையில் வருவது சிறப்பாகும். அதுவே, புன்னகைப்பூக்களாம். இதனை மக்கள் வாழ்வில் கடைப்பிடித்தால், நாடும் வீடும் சிறப்பாகப் புன்னகைப் பூக்களாகத் திகழும்!"

**கி. இளங்கோ**

திருநகர், மதுரை – 6.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | அமைதித் தூதி | 1 |
| 2. | பெண்பார்க்கிறோம் | 4 |
| 3. | அடிக்கடி வருவேன் | 8 |
| 4. | பணிவும் துணிவும் | 11 |
| 5. | ஒத்தபரிசு | 14 |
| 6. | தோற்கும் இன்பம் | 17 |
| 7. | கண்ணீரின் ஆற்றல் | 21 |
| 8. | அறிமுகம் | 23 |
| 9. | வேலை கொட்டிக் கிடக்கிறதா? | 25 |
| 10. | உப்பு - சப்பு | 28 |
| 11. | பளிச்சொளி | 32 |
| 12. | புன்முறுவல் பூ | 34 |
| 13. | நடைமேடை | 38 |
| 14. | எல்லாம் ஓடுகிறது | 41 |
| 15. | ஒரு சுற்று | 45 |
| 16. | எனக்கு ஒரே ஒரு குழந்தை | 48 |
| 17. | ஒரு கோடி பரிசு | 51 |
| 18. | தாயும் மகளும் | 55 |
| 19. | அம்மா அருள் புரிதல் வேண்டும் | 59 |
| 20. | மாமா மாமி பாடு | 62 |
| 21. | தாமரைப் பொய்கை | 65 |
| 22. | சுண்டு விரல் | 69 |
| 23. | தேனும் பாலும் பாகும் | 72 |
| 24. | என்னை அழ வைக்காதீர்கள் | 75 |
| 25. | எனக்குச் சொல்லத் தெரியாது | 78 |
| 26. | என் இவளோடு பாடு | 81 |
| 27. | திருமணப் பரிசு | 87 |

# 1. அமைதித்தூதி

"என் போட்டியே, வருக!"

"என் ஊக்கியே, வாழ்க!"

"என்ன வியப்பு!"

"வியப்பு ஏதுமில்லை ; ஒரு வேண்டுதல்!"

"இன்னும் போட்டி வேண்டலா?"

"இல்லை, நல்வாழ்வு, நலவாழ்வு வேண்டுதல்".

"நல்லதாயிற்று ! இன்று எங்கள் திட்டத்தை நிறுத்தி விடுகிறோம்."

"நிறுத்தக் கூடாது என்பதற்கே முன்வந்தேன்."

"நீங்களும் அப்பா அம்மாவும், உங்கள் உறவுப் பெண்ணைப் பார்க்க வருதல் வேண்டும். அப்பா அம்மா பார்த்தால் போதும் என நீங்கள் வராமல் இருந்து விடக் கூடாது!"

"நான் பாராத பெண் இல்லையே!"

"உருவத்தைத் தானே பார்த்தீர்கள்; உள்ளத்தைப் பார்க்க வேண்டாவா?"

"உள்ளத்தைப் பார்க்க என்னிடம் கண்ணாடி இல்லை."

"கண்ணாடி வேண்டா! கருத்து உண்டல்லவா! கண்ணோட்டம் உண்டு அல்லவா!"

"சரி! வருகிறோம்!"

"பெற்றோர்கள் நம் உறவு என்று எண்ணி, நீங்களும் விரும்புவீர்கள் என்று எண்ணி, பெண்பிடிக்கிறது, "எப்பொழுது உறுதி செய்ய வரலாம்" என்று கேட்பார்கள் அல்லவா !

"அவர்கள் உறுதியும் என் இசைவும் இருப்பதால் தானே பெண்பார்க்க வருகிறோம்".

"அதைத் தான் சொல்கிறேன்; **இருவர் வாழ்வு நலனுக்காகவும் உடனே முடிவு செய்து விடாமல், "வீட்டுக்குப் போய்க் கலந்து பேசி வேண்டியவர்களிடமும்** கலந்து பேசி, – **முடிவு சொல்லிவிடுகிறோம்"** என்று சொல்லி விட்டு மட்டும் வந்து விடுங்கள்! **நான் போட்டியில்லை. உங்களால் ஊக்கப்படுத்தப்பட்டவள்! உங்களையும் ஊக்கப்படுத்தியவள். நீங்கள் பார்க்கவரும் பெண்ணின் தோழி! உங்களுக்குத் தூதி!**

"இது என்ன, ஔவையார் தூது வேலை!"

"அது, ஆக்கம் செய்ததா? கேடு செய்ததா?"

"அமைதி செய்தது!"

"அதே அமைதித் தூதி தான் நான்"

"அவர் பாட்டி! நீ என் போட்டி ;"

"அதை மறந்துவிட்டுப் பேசுங்கள்! **உங்கள் இருவர் நலங்களை மட்டும் எண்ணுங்கள்!"**

"என்ன புதிராக உள்ளது;"

"புதிர் வெளிப்படும்போது, என்னைப் போட்டியாகவோ தூதியாகவோ எண்ணாமல், நீங்கள் பார்க்கும் பெண்ணுக்குத் **தோழியாக மட்டும்** நினையுங்கள்!"

"போகாத ஊருக்குத் தெரியாதவன் வழிகாட்டுவதுபோல் உள்ளது!"

"விடியுமுன், கப்பிய இருள் இருக்கும்; இருளைக் கிழித்துக் கொண்டு **செங்கதிர் புறப்படும் போது, கையெடுத்து வணங்க வைக்கும்!** நாம் இருவரும் **பொழிவுப் போட்டியில்** நடுவர்களைத் திணற வைத்து **'நீங்களா நானா'** என்னும் நிலையில், **'இருவரும்'** என நடுவர்கள் தீர்த்து இருவருக்கும் பரிசு வழங்கவில்லையா?"

"யாரோ வருகிறார். வேறு ஒன்றும் இல்லையே!"

உண்டு.

"ஒன்றே செய்யவும் வேண்டும் – ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் – நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் – இன்றும்
**இன்னே செய்யவும் வேண்டும்"**

என்று சொல்லிவிட்டு, எழுகதிரிடம் இருந்து, முழுமதி விடை பெற்றான்.

**எழுகதிர்** திகைப்பில் ஆழ்ந்தான்!

**முழுமதி** நம்பிக்கையோடு, அவள் தோழி **அல்லி**யிடம் சென்றாள்.

♦♦♦

# உ. பெண் பார்க்கிறோம்

“என்ன கதிர், புறப்பட நேரமாகிறதல்லவா! உன் மாமன் வந்து அரைமணியாயிற்று! அம்மாவும் நீயும் உடைமாற்றிக் கொண்டு புறப்பட வேண்டியதுதான்” என்றார் தந்தை **புகழேந்தி.**

“சொந்த உறவு என்றாலும், போகும் வகையில் போகவேண்டும் அல்லவா! வந்து விடுகிறேன் அப்பா!”

“கையில் என்ன?”

“காலை உணவு! நம் நால்வர்க்கும்!”

“பெண்வீட்டில் எல்லாரும் நம்மோடு உண்ணக் காத்திருப்பார்கள்”.

அப்பா, நாம் இயல்பாக உறவுமுறையில் பேசிவரப் போகவில்லை. பெண்பார்க்கப் போகிறோம். பெண் பார்க்கப் போன இடத்தில் குடிப்புக் கூட குடிப்பதில்லை. இதை நீங்களோ, அம்மாவோ, மாமாவோ, அறியாதவர்களா? **உறுதி செய்யப் போகும் போது தான் உண்பது வழக்கம்!** அதை மாற்றலாமா?

“சரி உண்ணலாம்; உடன்புறப்படலாம்!”

நான்கு பொட்டலங்கள் தனித்தனியே வாங்கியிருந்தான் எழுகதிர்.

மேடைக்கு அழைத்து மாமா. அப்பா முன் ஆளுக்கொரு பொட்டலம் வைத்தான்.

“நான் குளித்துவிட்டு வருகிறேன்! அம்மாவும் நானும் உண்கிறோம்.”

கதிர், நீராடி வந்தான். அம்மா உடைமாற்றி வந்து, கதிரை நோக்கினாள். அவன் வந்ததும் இருவரும் உண்டனர்.

“நீ செய்தது தான் சரி; பெண்ணுறுதி செய்யும் போது தான், பெண் வீட்டில் உண்பது வழக்கம். பெண்பார்க்கப் போகும்போது உண்ணும் வழக்கம் இல்லை என்றாள்” தாய் **தனமணி.**

**கங்கை கொண்டானில்** இருந்து, **மேட்டுக்குப்பம்** சென்றது வண்டி. மேட்டுக் குப்பத்தில் பெண் வீட்டார் எதிர்பார்த்திருந்தனர். அல்லியின் பெற்றோர் உற்றார் உறவினர் வீட்டில் நிரம்பி இருந்தனர்.

"சரியான நேரத்திற்கு வந்துவிட்டீர்கள்" என்று அனைவரும் வணங்கினர்.

உறவினர் என்றாலும் அடையாளப்படுத்திக் கொண்டனர். புகழேந்தி, "இவர் தாய்மாமன்; இவர் என் மனைவி **தனம்;** இவன் என் மகன் **எழுகதிர் ;** மணமகன்; ஆசிரிய முதுநிலைப் பட்டம் பெற்றவன் என்றார். உற்றார் உறவினரும் அறிமுகப்படுத்திக் கொண்டனர். பெண்ணின் தாய்மாமன் மாமியர் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்தனர். பெண்ணுடன் தோழியும் வந்தாள். **மாமனைக் காலில் விழுந்து பெண் வணங்கினாள்.** கூடியிருந்தவர்களுக்கெல்லாம் கும்பிடு போட்டாள். தோழியுடன் உள்ளே போய் விட்டாள். மணமகள் **அல்லி !**

"யாரோ இல்லையே ! உறவு தானே ; நல்லநாள் பார்த்து உறுதி செய்யலாம்" என்றனர்.

"நாங்கள் ஊருக்குப்போய், உறவினர்களோடு கலந்து பேசிக் கொண்டு வருகிறோம். **நீங்களும் எங்கள் வீட்டைப் பார்க்க வேண்டும்** அல்லவா ! ஆதலால், நாங்கள் கலந்து பேசிச் சொல்லிவிடுகிறோம்" என்று புறப்பட்டனர்.

புகழேந்தி பேசினார்; தனமோ, கதிரோ, தாய்மாமனோ எதுவும் பேசவில்லை.

கங்கை கொண்டானுக்கு வந்தனர்.

"என்ன கதிர் உன் எண்ணம் என்ன?"

"நான் பாராத பெண் இல்லையே ! இளமையில் உடன் படித்தவள் தானே ! மாமா, அம்மா, நீங்கள் சொல்வதற்கு மேல் நான் என்ன சொல்லப் போகிறேன். ஆர அமர எண்ணி அவர்களை நம் வீட்டுக்கு அழைப்போம்" என்றான். அவர்க்குத் **திட்டக்குடியில்** ஒரு வேலை இருந்தது. அதனால் புறப்பட்டார்.

கதிர், "அம்மா உங்கள் எண்ணம் என்ன?" என்று தனியே அழைத்துக் கேட்டான்.

"நல்ல பெண் உனக்குத் தக்கவள் தான்! உன்னோடு படித்தவள் என்று சொல்கிறாய். முடிவு செய்யலாம் இல்லையா?"

"அம்மா, அல்லி அப்பாவை வணங்கினாள். உங்களை வணங்கினாளா? நீங்கள் தானே தாய்போலப் பேண வேண்டியவர். அப்பாவை வணங்கிய தலையும் கையும் உங்களைப் பொருளாக எண்ணி வணங்க வில்லையே!"

"அதனால் என்னப்பா ! உனக்குப் பிடித்தால் சரிதான்."

"இல்லை அம்மா, என் அம்மாவை மதிக்காதவள் எவ்வளவு அழகி என்றாலும், அறிவு என்றாலும், உறவு என்றாலும் எனக்குப் பிடியாதவளே ; உங்கள் பெருந்தன்மையால் சொல்கிறீர்கள். பெண்பார்க்கும்போதே இப்படி இருப்பவள், பின்னே வீட்டுக்கு வந்து உங்களை மதிப்பாளா? உங்கள் சொல் கேட்பாளா?"

"அப்பா, நீ திருமணம் செய்து கொண்டு இங்கேயே இருப்பாயா? உனக்கு வேலை எங்கேயோ? அவள் வேலைக்குப் போனால் அவள் வேலை எங்கேயோ! உனக்குத் தக்கபடி நடந்து கொண்டால் என்னைப் பற்றி நீ ஏன் கவலைப்பட வேண்டும்?"

"அப்படியானால் எங்களை வேறாக ஒதுக்கி வைத்து விட்டீர்களா ? உங்கள் முதுமையில் யார் பார்ப்பார். நான் ஒருபிள்ளை தானே உங்களுக்கு; அவள் தானே உங்களைப் பார்க்க வேண்டும்;"

"நீ சொல்வதும் சரிதான்; உன் வயது போகிறதே;"

"வயது எல்லாருக்கும் போகத்தான் செய்யும். நான் அப்பாவிடம் சொல்ல முடியாது ! நீங்கள் தான் அப்பாவிடம் பக்குவமாக, நம் கதிருக்குப் பெண்ணைப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் வீட்டாரை நம் வீட்டுக்கு அழைக்க வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள்" என்றான். மதி வந்து சொன்னதை, மதியால் நிறைவேற்றிவிட்டான்

**கதிர். தாய், தனம் எண்ணினாள்** ! "என்மேல் பாசம் மிக்கவன் ! வந்த பெண் காலில் விழவில்லை என்றாலும், கையெடுத்தாவது கும்பிட்டிருக்கலாம். அவர்கள் உறவினர்களைக் கும்பிட்டவள் என்னை ஏறிட்டுக் கூடப்பார்க்க வில்லையே ! இளமையில் கூடப் படித்தவள். **வேறுகாரணம் கூட இருக்கலாம்.** அவனுக்குப் பிடியாத பெண்ணை நாம் ஏன் வற்புறுத்தித் திருமணம் செய்யவைத்துக், காலமெல்லாம் **"உங்களால் ஆயது** " என்று பழிக்கு ஆளாக வேண்டும் " என்று முடிவு செய்தாள்.

திட்டக்குடி சென்ற புகழேந்தி மாலையில் வந்தார். முன்னே நெருங்கிய நண்பர் ; அவர் வீட்டுத் திருமண வரவேற்பு அங்கே உணவு முடித்தாயிற்று என்று சொல்லி, நீங்கள் உண்ணுங்கள் " என்றார்.

**"என்ன பெண் பார்க்கப்போனோமே ! உன் கருத்தென்ன ? கதிர் கருத்தென்ன ?** என்றார்.

"எனக்குத் தக்க பெண் என்று தான் தோன்றுகின்றது. ஆனால், கதிருக்கு உடன்பாடாக இல்லை. அவன் விருப்பமில்லாமல் நம் கட்டாயத்திற்கு மணம் செய்தால், நமக்கும் நல்லதில்லையே !

"அவனுக்கு உரிய காலத்தில் செய்ய வேண்டும். உறவாக இருப்பதும் நல்லதே என்றுதான் நினைத்தேன். எனக்கு இசைவாகத்தான் உள்ளது. ஆனால் வாழப் போகின்றவன் அவன். **அவன் இசைவு இல்லாமல் நாம் முடிவு செய்வது நல்லதில்லை.** வரவேற்புக்குப் போன இடத்தில் நான் பழைய நண்பர்களைப் பார்த்தேன். நம் கதிருக்குப் பெண் பார்த்தாயிற்றா " என்று கேட்டனர். "பார்த்துக் கொண்டு உள்ளோம்" என்று பொதுவாகச் சொல்லி வந்தேன். பார்க்கலாம் என்றார்.

♦♦♦

# 3. அடிக்கடி வருவேன்

கைப்பேசி ஒலித்தது. கதிர் எடுத்தான்.

**"வணக்கம் கதிர் ...."**

**"உங்கள் அமைதித் தூதியின் வணக்கம்".**

"ஆ! ஆ! குயிலிசையாக உள்ளது" ;

"இல்லை ! உங்கள் செயல்தான் மயிலாட்டமும், குயிலிசையும்!

"அல்லி, மாமாவை வணங்கி மாமியை வணங்காமல் வந்தது?"

"நாங்கள் கூடிப் பேசியது."

"சரியான தோழிகள்"

"நீங்கள் சீரான தேர்ச்சியர். உங்களுக்கு ஆயிரம் நன்றிகள்"

"தாங்க மாட்டேன்!"

"எனக்காகத் தாங்கக் கூடாதா?"

**"உனக்காக என்றால், ஆயிரம் நன்றிகள் உனக்குச் சொல்வேன்".**

"நாம் சந்திக்க வேண்டும் ! **தோழியும் தோழியும் கூடிய தோழமைச் சந்திப்பு நல்ல தில்லையா?"**

"எங்கே சந்திப்பது?"

"நானும் அம்மாவும் தான் உள்ளோம். எங்கள் வீடு **வள்ளலார் சன்மார்க்க சபை** வாயில் வளைவுக்குக் கீழக்குப் பக்கம் மூன்றாம் வீடு."

"அம்மாவுக்கு அல்லியைத் தெரியுமா?"

"என்னினும் கூட அம்மாவுக்கு அல்லியைப் பிடிக்கும்!"

"நான் வருவது ..."

"அம்மா மிக மகிழ்வார்கள்! அன்றைக்கு நீங்கள் அல்லி வீட்டுக்கு வந்தபோது அம்மாவும் அங்கே இருந்தார்களே!"

" என்னைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையா?"

"சொன்னார்கள் : அல்லி கொடுத்து வைக்காதபாவி; கதிர் தங்கமான பிள்ளை என்றார். நீங்கள் நாளைக் காலை 9 மணிக்கு வருவதை எதிர் பார்க்கிறோம். அல்லி, நான், நீங்கள், அம்மா நான்குபேரும் ஒன்றாக உண்கிறோம்; சரியா?"

**"அங்கே போட்டி இராதே!"**

**"பெரும் போட்டி இருக்கும்!** அம்மா ஆக்குவார், படைக்க மாட்டார். அல்லி முந்துவாள்! என் வேண்டலில் வந்த விருந்தாளிப் போட்டிக்கு, நான் படைக்காமல் விட்டுத் தருவேனா அல்லிக்கு!" என்றாள்.

சரியான பொழுதில் எழுகதிர் எய்தினான்.

முழுமதி முன்னின்றாள் ! வணங்கி வரவேற்றாள்.

"கதிர் முன், அல்லி மலருமா?"

"முழுமதி முன் மலருமே!"

சொல்லி முடியவில்லை, அல்லி முன்னின்று வணங்கினாள். முழுமதியின் தாய் **தவச்செல்வி, 'தம்பி வாங்க'** என்றார்.

கதிர் எழுந்து வணங்கினான்.

"மதி, பொழுதாயிற்று, உண்ணச் சொல்" என்று இட்டவி, தோசை, கறை துவையல், பருப்புக்குழம்பு, வடை என எடுத்துத் தந்தார். மதி, கதிருக்கு நீர்க்குவளை தந்தாள் ; துடைக்கத் துணி தந்தாள். **"என் பையில் இருக்கிறது"** என்று எடுத்தான் **கதிர்.**

**"என்கையில் இருக்கிறது"** என்று துணியைத் தந்தாள் **மதி.**

மூன்று இலைகளில் நீர் தெளித்து மேடையில் பரப்பினாள் மதி

கதிர் அமர்ந்தான் ; படைக்க முன்வந்தாள் அல்லி.

நீ விருந்தாளி ; அமர் என்று மதி படைத்தாள்.

'மதி' அல்லி என்ன ஊமையா?

"ஆம் கதிர் முன் அல்லி ஊமைதான் ! மதிமுன் மலரும் ! "மூவரும் உண்டனர்; அம்மா தனியே அறையுள் உண்டார். ஒரு பையோடு வெளியே வந்தார். மதி நான் வெள்ளி தோறும் சன்மார்க்க சபைக்குப் போய் ஒரு சுற்றுச் சுற்றி வருவேன் என்பது உனக்குத் தெரியும். அதன்படி போய் விட்டு, கடைத் தெருவில் வாங்க வேண்டியவை வாங்கிக் கொண்டு வருகிறேன். **தம்பியை இருக்கச் சொல்.** நண்பகல் உணவுக்குமேல் போகலாம்!"

"இல்லை, நான் வீட்டில் இங்கு வந்ததைச் சொல்லவில்லை. ஆதலால், அப்பா, அம்மா தேடுமுன் வீட்டுக்குப் போக வேண்டும்! **"என்றும் எனக்குப் போட்டி மதி ! அதனால் அடிக்கடி வருவேன்"** என்று வணங்கினான்.

"எனக்குத் தெரியும் ; **உங்கள் போட்டி உயர்ந்த போட்டி! இந்தப் போட்டி ஆக்கப் போட்டி ; அழிவுப் போட்டி இல்லை!"**

"இந்தச்சொல் ஆயிரத்தில் ஒருசொல் இல்லை ! கோடியில் ஒருசொல்!"

**"மதி உங்கள் வயிற்றில் பிறக்கத் தெய்வப்பேறு பெற்றவள்!"**

அவரை அறியாதே கண்கசிந்தது ! நின்று கண்ணைத் துடைத்துக் கொண்டு புறப்பட்டார்.

♦♦♦

# 4. பணிவும் துணிவும்

மூவரும் உண்டு முடித்தனர்.

"போட்டி அம்மா, என்னை அழைத்த போட்டி என்ன?"

"காதல் போட்டி!"

"உங்களுக்கா, அல்லிக்கா?"

"பெண்பார்க்கச் சென்றது அல்லி வீட்டுக்கா? எங்கள் வீட்டுக்கா? மதி இதனைச் சொல்லும் போது, அல்லி எழுந்தாள், எதிர்பாரா வகையில் **கதிர் காலில் விழுந்தாள் !** கையைப் பற்றித் தூக்கினான். 'என்ன இது'?

"பத்துப்படிக்கும் போதே அம்மா அப்பா இருவரும், நம் உறவுக்காரக் **கதிர் தான் உன்னை மணம் செய்வான்"** என்றனர்.

"எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடுகிறீர்கள் ! அவர் தகுதி என்ன; என் தகுதி என்ன? அவர் குடும்பநிலை என்ன, நம் குடும்ப நிலையென்ன?"

உறவு மட்டும் போதுமா? என்று மறுத்தேன். இந்தப் பேச்சை மேலும் எடாதீர்கள்" என்றேன்!

"என்னோடு பத்தும் பதினொன்றும் படித்தவன். உறவினன் ; மிக நட்பாகப் பழகினான். அந்த நட்பு எங்கள் இருவருக்கும் காதலாக விரிந்தது. அவன் பக்கத்துத் தெருவினன் ; நெருங்கிய உறவு ஆதலால், அடிக்கடி ஏதாவது ஒரு காரணம் காட்டி வீட்டுக்கு, **நாளைக்கு நான்கு முறையாவது** வருவான். அப்பா ஊரில் இல்லாத நாளில் அம்மாவினிடம் இசைவு பெற்று, படம் பார்க்கச் செல்வேன். அவன் முன்னரே இருந்து சீட்டு வாங்கி வைத்திருப்பான். படம் பார்த்து விட்டு , அடுத்த தெருவரை வந்து, விட்டு விட்டுப் போய்விடுவான். ஒருநாள் அப்பா, என்னையும் அவனையும் கண்டு விட்டார். **"இனிமேல், வீட்டுப்பக்கம் எட்டிப்பார்த்தால் காலைக் கையை முரித்து விடுவேன் "** என்றார். **அது குடும்பப் பகையாகி விட்டது.**

அம்மா பக்குவமாக, "இதைப் பெரிதுபடுத்தினால் இவள் எதிர்காலம் கெட்டுப்போகும். நாம் விரைவில் மணமகன் ஒருவனைத் தேடி மணம் முடித்து விட வேண்டும் என்னும் நிலையில் தான், உங்கள் உறவுகருதி ஏற்பாடு செய்தார்கள். கட்டாயம் நீங்கள் என்னை ஏற்கமாட்டீர்கள். ஒருவேளை ஏற்க நேர்ந்தாலும், பின்னர் உண்மை தெரிந்து, "இருவர் வாழ்வும் ஒட்டா வாழ்வாய்க் கெட்டொழியும்" என்பதால் தான், என்றும் என் உயிர்த் தோழியாக விளங்கும் மதியை, உங்களிடம் உண்மையை வெளிப்படக் கூறாமல், குறிப்பாகத் தடுத்து விடவேண்டும் என்று தூது விட்டேன். தூது விடும்போது தான் அவள் பண்பு நலத்தையும் அறிவுச் சிறப்பையும் அறிந்து கொள்ள வாய்த்தது. அவளுக்கும் உங்களுக்கும் மெச்சத்தக்க போட்டி இருந்தமையும் அதன் புகழ்மையும் எனக்கு எதுவும் தெரியாது!"

"வாழும் தெய்வமாக எண்ணி, என் அழுக்கை உங்கள் நல்லெண்ண நன்னீரால் கழுவி, என்னை என் காதலனோடு வாழ்விப்பதற்காக நன்றி கூறவே அழைத்தேன்" என்றாள்.

"இனி என்ன செய்யப் போகிறாய்?"

"நானும் அவரும், யாருக்கும் தெரியாமல், ஓடிப்போய்த் திருமணம் செய்து கொண்டு வாழலாம் என முடிவு செய்துள்ளோம்."

"இரட்டை வேடம் போடக் கூடாது என்னும் எண்ணமுடைய உனக்குக் கோழைத்தனமான முடிவு ஆகுமா?"

"அவன் உறுதியானவனா? உன்னைப்போல் உண்மையானவனா? உன் படிப்பு, முடியாப் படிப்பு, அவன் படிப்பு?

"பன்னிரண்டு முடித்த படிப்பு."

"அதற்கு மேல், வேலைத்தகுதி உண்டா? "இல்லை"

"காதலிக்கத் தெரிகிறது ! காலந்தள்ள என்ன வழி கண்டீர்கள்! இந்த மதியின் தோழி எனத், தகுதி உண்டா உனக்கு? மதியின் தாய் தவச்செல்வியார் வாயிலில் காலடி எடுத்து வைக்கத் தகுதி உண்டா உனக்கு ? எங்கே போனார்கள் ? ஏன் போனார்கள்? புரிகிறதா?

"நீ எனக்கு உறவு என்றால், அவன் உனக்கு உறவினன் என்றால், எனக்கும் உறவினன் தானே!"

**"ஓடிப்போகும் திட்டத்தைக் கைவிட்டுப் பெற்றோரை மன்றாடுங்கள்!**

மன்றாட்டுப் பயனில்லையா, **போராடுங்கள்!** உங்களைப் பெற்றவர்கள் தாமே! **உங்களைப் போல வாழ்வு நிலை அறியா மூடர் அல்லர்!** அறிவுரை சொல்கிறேன் என்று எண்ணாதே! மதியை நம்பி இரு! அதுபோல் என் சொல்லை நம்பியிரு; **பணிவு வேண்டும்; துணிவும் வேண்டும்!** நல்லதே நடக்கும். "அவன் பெயரென்ன?, **"அழகன்"**! மதி அம்மா வந்தவுடன், அந்தத்தவச் செல்வியை வணங்கி விடைபெறுகிறேன்!

"மதி நான் சொல்வது சரியா?

**"மாறு சொல் சொல்ல, எனக்கு வாயே இல்லை!**

"உங்கள் உயர்வை அறிந்ததால் தான் என் தோழிக்காகத் தூது வரத் துணிந்தேன். அதன் பயன் நலமாக முடியும் !

♦♦♦

## 5. ஒத்த பரிசு

தவச்செல்வியார் வந்ததும் அம்மா, நான் வருகிறேன். இன்ன இடம் என்று சொல்லாமல் வீட்டில் இருந்து வந்தது இப்பொழுது தான். அதுவும், மதி அழைத்ததால் கட்டாயம் நல்லதற்கே இருக்கும் என வந்தேன். இனி மதிக்காக இல்லை! **உங்களுக்காகவே வருவேன். அப்படி வந்தால் வள்ளலார் சாமியே 'வழியும் ஒளியும் காட்டுகிறார் என மகிழ்வேன் என்றார்.**

வணங்கி விடைபெற்றான் கதிர்.

மதி, முற்றம் வந்தாள்.

"உங்கள் படிப்பு முடிந்தது! வேலை!"

"தனியார் பள்ளிக்கு அழைக்கிறார்கள்."

"நான் கரிக்கட்டி ஆலைப்பள்ளிகளில் வாய்க்குமா எனப்பார்க்கிறேன்."

"நேர்காணலுக்கு வாய்த்தால் கட்டாயம் வாய்க்கும் வேலை."

**"அங்கே நான் போட்டிக்கு வருவேன்!"**

"நான் என் விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வேன்."

"இருவருக்கும் வாய்ப்புக் கிடைத்தால், **அது கதிர் என்னும் நாள் மீன் தந்த, கோள் மீனாம் மதி என மகிழ்வேன்!"**

"நிலையம் வரை வரவா?

**"நான் அல்லி இல்லை!**

வணங்கி விடைபெற்றான் கதிர்!

தவச் செல்வியார் வாயிலில் நின்று வணங்கிக் கொண்டிருந்தார்.

**"மதி, வள்ளலார் சாமி மறையவில்லை அம்மா, அங்கங்கே ஒளிகாட்டிக் கொண்டுதான் உள்ளார்."**

அல்லி உள்ளே போய் முகத்தைக் கழுவி விட்டு வந்தாள்.

" போட்டி, போட்டி – என்ன போட்டி ?

" நாங்கள் இருவரும் இளங்கலை மூன்றாமாண்டுகளும் ஒன்றாகப் படித்தவர்கள் மேலேயும் உடன்படித்தவர்கள்."

என் மதிப்பெண்ணை முந்தப்பார்ப்பார் ! நான் முந்திவிடுவேன் !

இந்த முறையில், முதல் பருவம் இரண்டாம் பருவம் இரண்டிலும் நான் முந்தினேன். அனைவரும் கைதட்டி வரவேற்றனர். **அவர் முகத்தில் கவலை படர்தலை இயல்பாக எண்ணினேன்.** இரண்டாம் முறை அவர் கண் கலங்கினார் . எனக்கு **அவர்க்கு மேல் துயராக இருந்தது.** தேர்வில் சில வினாக்களுக்கு விடை தெரிந்தும் எழுதாமல் விட்டேன். **அவர் முதல் நிலையுற்றார். எல்லாரும் கைதட்டியதற்கு மேல் யான் கைதட்டி உங்கள் முதன்மையைப் பாராட்டி மகிழ்கிறேன் என்றேன்.** அடுத்த முறை, அவர் தெளிவாகி விட்டாரா என்று அறிய முழுவதாக எழுதினேன். முதலாவதாக நான் வந்தேன். அவர் கை தட்டினார். "உங்கள் தேர்ச்சியை மட்டுமல்லாமல் உங்கள் உள்ளத்தை ஊக்கப்படுத்த வேண்டும் என்று இரண்டு மூன்று வினாக்களுக்கு விடை எழுதாமல் விட்டேன். பாராட்டினேன். எதிர்பார்த்தது நடந்து விட்டது! " **நம்முள் யார் முந்தினாலும் இருவரும் முந்தியவர்களே என்றேன்!**

"**மிக உண்மை**" என்றார்.

**"உள்ளம் உடைமை உடைமை"**

என்னும் தலைப்பில் பொழிவுப் போட்டி. மூவர் நடுவர். மூவர் மதிப்பெண்ணும் ஒப்ப அமைந்து நடுவர்களைத் திணறச் செய்தது. "சீட்டுக் குலுக்குவோம்" என்றார் ஒருவர்!

இன்னொருவர், இருவருக்கும் ஒத்த பரிசு வழங்குவோம் என்றார்;

**பின்னதை மூவரும் ஏற்றனர்.** இருவரும் மகிழ்ந்தோம்.

என் பரிசை, அவரிடம் தந்தேன்!

அவர் பரிசை, என்னிடம் தந்தார்!

**இருவருக்கும் ஒத்த பரிசுதானே!**

சான்றிதழில்தானே அவரவர்க்குரிய பெயருள்ளது!

என் பரிசை அவர்க்குத் தர, அவர் பரிசை எனக்குத்தர

அவையோ ஆரவார ஒலிசெய்ய,

நடுவர் மூவரின் தலைவர்,

**"போட்டி என்றால், இதுதான் பண்பாடான போட்டி! போட்டியிடுவார், உள்ளம் உடைமையாம் உடைமை" இப்பண்பு** என்று தலைப்புக்கே வியப்பான பொருளைத் தந்து அவையை மகிழ்வித்தார்!

உலக முதல் தூதர் - பெண்பால் தூதர் - ஔவையார் ! ஆதலால் போட்டி என்றதும் பாட்டி முன்வந்து தலையைக் காட்டுகிறார் என்றாள் மதி. அல்லிக்குத் தலை சுற்றியது ! பிஞ்சிலே தான் பழுத்ததை எண்ணினாள்!

**மதி வழியாகக் கதிர்க்கு உணர்த்தவாவது விழிப்பு ஏற்பட்டதே என மகிழ்வும் கொண்டாள்.**

♦♦♦

# 6. தோற்கும் இன்பம்

அல்லி, மதியோடு இருப்பதால் அவள் பெற்றோர், மேல் விளைவு ஏதும் ஏற்படாது" என நம்பியிருந்தனர். அவர்கள் எதிர்பாராவகையில், **கதிரும் அவன் தந்தையும்,** அல்லி வீட்டுக்கு வந்தனர். "நம் பழைமை பாராட்டி வந்தோம். பெண் பார்த்து விட்டுப் போய்ச் சொல்வதாகச் சொன்னோம். இதுவரை சொல்லவில்லை. இன்னும் காலம் தாழாமல் சொல்லிவிட வேண்டும் என்று வந்தோம். கதிருக்கு, **வேலைக்குச் சென்று குடும்பம் நடத்துகிற வாய்ப்பு வரும்வரை திருமணம் செய்தல் வேண்டாம்"** என்ற கருத்து உள்ளது. நாங்கள் அதைச் சொல்வதோடு, நம் உறவுப் பையன் **அழகன்** என்பவன் உள்ளான். அவன் பெற்றோர் **முருகப்பன், பூமாலை** என்பவர் உங்களுக்குத் தெரியாமல் இரார். ஒரு பெண்ணுக்குரிய காலத்தில் திருமணம் நிகழ்த்தி விடுதல் எந்தப் பெற்றோர்க்கும் நலம் என விரும்புவர். மூத்தபெண் காரைக்காலில் குடும்பத்தோடு உள்ளாள். அல்லிக்கும் நிலபுல வாய்ப்பு, அவனுக்கும் அவ்வாய்ப்பு, இருப்பிடமும் பக்கம் என்பதால், இருகுடும்பங்களுக்கும் நலமாம் எனக் **கதிரே அறிந்து, சொன்னதால்** அதையும் நாம் சொல்வோமே என வந்தோம் என்றார் புகழேந்தி.

அல்லியின் தந்தைக்குப் **பழைய நினைவு தலைகாட்டிப் பகையாகிப் போனதை எண்ணச் செய்தது.** அதனால், **"உங்கள் எண்ணம் நம் பழமை உறவை மீட்பது, இங்கேவந்த நீங்கள் அங்கேயும் சென்று அவர்கள் எண்ணத்தையும் தெரியுங்கள்"** என்றார்.

முருகப்பனும் அழகனும் இருந்தனர். எதிர்பாரா வரவென வரவேற்று மகிழ்ந்தனர். நம் உறவுப் பெண் அல்லி, அவளைப் பெண் பார்க்க வந்தோம். நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். மகன் எழுகதிர், "நான் வேலைக்குப் போகாமல் திருமணம் செய்ய மாட்டேன்" என்று சொல்லி விட்டான். சரி, நம் உறவுப்பையன் அழகனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அவன் பெற்றோரும் நம் உறவுதானே கலந்து பேசுவோம் என வந்தோம்.

“உங்கள் எண்ணம் நல்ல எண்ணம். ஆனால், அல்லியின் அப்பா அம்மா எண்ணம் என்னவோ, **அவர் எங்களைப் பகைபோலக் கருதி இருப்பவரே ! அவர் இசைவாரா ?** எங்களுக்கு உரிமைப் பெண் தான். பையனுக்கும் விருப்பம் தான் ! அல்லி வீட்டில் பேசினீர்களா ? நம் உறவு விட்டுப் போகக் கூடாது என்று சொன்னபின், **நீங்கள் முன்னின்று செய்தால், எங்களுக்குத் தடையில்லை”** என்று சொன்னபின் தான், உங்களைத் தேடிவந்தோம் என்றார் புகழேந்தி.

அம்மா அழகன் இரண்டு பேரையும் கலந்து கொண்டு நாம் உறுதிப்படுத்தினால் உறவோடு போய்ப் பரிசம் போடலாம். திருமணமும் குறித்து நடத்திவிடலாம். நாங்கள் அவர்களிடம் சொல்லிவிட்டு ஊர் போகிறோம். நீங்கள் உறுதி செய்யும் நாளைச் சொன்னால் நாங்களும் வருகிறோம் என்று புறப்பட்டனர்.

அல்லியின் பெற்றோரைக் கண்டு அவர்கள் இசைவு கூறியதைத் தெரிவித்து விட்டுத் தந்தையும் மகனும், நிறைவோடு கங்கை கொண்டான் வந்தனர். மதியின் செல்பேசி ஒலித்தது. வணக்கம் முழுமதி. “வணக்கம், உங்கள் தூதன் கதிர்! அல்லியின் தந்தையைக் கண்டு அழகன் தந்தையையும் கண்டு, திருமண உறுதிக்கு நாள் பார்க்க ஏற்பாடு செய்து விட்டு வந்தோம். அம்மாவுக்குச் சொன்னால் மகிழ்வார்கள் ! **அம்மா கால் நிழலில் நிற்க வாய்க்கும் போதெல்லாம் வருவேன். அதுபோதும், அம்மாவைப் பார்க்க வந்தால், ஓர் ஒரமாகக் கதவுப் பக்கமாக நின்று, உங்கள் காலடியைக் காண வாய்க்குமல்லவா!** அம்மாவுக்கு உங்களைக் கண்டது **இளமை திரும்பியது போல் மகிழ்வு! உனக்கு?”**

“எனக்கா?

**“உங்கள் நெஞ்சைத் தடவிப் பாருங்கள்!**

“தடவிப் பார்த்தால், ஒன்றும் தெரியவில்லையே!

“நினைவு கைக்குத் தட்டுப்படாமல், பட்டொளி செய்வது! எழுகதிர் உலகையெல்லாம் கண் விழிக்கச் செய்வது ! **அதுபாராது. அதைத்தான் பார்க்க வைக்கும். பார்வையும் பாவையும் அது தானே!**

"பாட்டெழுதக் கற்றுக் கொண்டாயா?

"கதிர் எழுமுன் சேவல் கூவாதா? காகம் கரையதா?

"சேவல் கூவவில்லை என்றாலும், கதிர் எழு! உண்மைதான். ஆனால், ...

"என்ன ஆனால்?"

**"கதிரொளி வழங்காவிட்டால் மதிக்கு ஒளியே இல்லையே!"**

**"கதிர் சுடும்!"**

**"எழுகதிர் சுடாது!"**

"நம் போட்டி எப்பொழுது நிற்கும்?"

"நானும் இதையே கேட்கலாம் இல்லையா? **உன்னிடம் தோற்பதில் ஓர் இன்பம் ! உங்களிடம் தோற்பதில் எனக்கு ஒப்பிலா இன்பம்!**

"ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்"

என்றார் வள்ளுவர் (1327)

**"அதற்கு நான் ஆளாக வில்லையே!"**

**"என்ன புதிர்"**

"நான், **வேலையாள் - சம்பள ஆள், சமையல் ஆள், மனையாள் என ஆகவில்லை அல்லவா!"**

**"அம்மா இல்லையா?"**

"பக்கத்தில் இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். **புன்முறுவல் பூத்துக் கொண்டிருக்கிறார்!"**

**"எதனால்?"**

**"நம்போல் அவர்க்கு என்றும் போட்டியில்லா வாழ்வு! தான் அடையாத போட்டியைத் தம்மகள் அடைகிறாள் என்ற மகிழ்வு!"**

"என் நன்றியையும் வணக்கத்தையும் கூறு!"

“நீங்களோ நானோ கூறாமலே குறிப்பறியும் திறத்தவர்!”

“நல்லது! வணக்கம்!”

“மிக வணக்கம்”

“அம்மா சொன்னார்; **தம்பியும் நீயும் நன்றாகப் பேசுகிறீர்கள்! நானும் உன் அப்பாவும்**”

“சோறு ஆய் விட்டதா?”

**‘ஙும்!’**

“சாப்பிட வாரீகளா?”

**‘ஙும்!’**

“எப்படியோ நீ பிறந்துவிட்டாய்!”

“அதுவும் இன்பம் தான்! இதுவும் இன்பம் தான்! எதுவும் இன்பம் தான் என்று கொண்ட **கட்டை இது**!” என்றார்.

**“நமக்கு நல்ல அம்மா”**

“**உங்களுக்குமா?**”

**“நான் அவர்க்குப் பிறக்காமல் பிறந்த குழந்தை!”**

“அம்மா திசை நோக்கி வணங்குகிறார். “வணக்கம்”

♦♦♦

# 7. கண்ணீரின் ஆற்றல்

அல்லி, மேட்டுக்குப்பம் வந்தாள்! அம்மா **மல்லிகை** இருந்தார். வீடு கல கலப்பாக இருந்தது! அப்பா **வல்லாளரைக்** காணவில்லை. அம்மா சொன்னார்; **"கதிர் வரவால் உன்வாழ்வு** ஒளிபெற்றதாயிற்று. நாளைக்கு **'உன் ஊர் சுற்றி'** வீட்டார், உற்றார் உறவோடும் தட்டு தாலத்தோடும், உனக்குப் பரிசும் போட வருகிறார்கள்!

"அப்பா!"

"அப்பா இசையாமல் முடியுமா?"

"இரண்டு வீட்டுப் பகையும் ஒழித்து, உறவாக்கிவிட்டார் என் அண்ணன் **புகழேந்தியும், மருமகன் கதிரும்!"**

"ஏன் அவர்கள் வரவோ, செய்தி தரவோ இல்லையாம்?"

**"உன் மாய்மாலம், பெற்றவளுக்குத் தெரியாதா? மதியும் எனக்கு வாய்க்காமல் வாய்த்த மகள் தானே! அவளும் கதிரும் முடிவெடுத்துச் செய்த செயல்தான் இது."**

**"உங்களுக்கு?"**

**"உள்ளுக்குள் மகிழ்ச்சி ; வெளிக்காட்ட முடியாத இறுக்கம்;**

"அப்பா எங்கே?"

"நாளை வருபவர்களுக்கு நாமும் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லவா; அதற்காகப் போயுள்ளார்!"

"நான் என்ன செய்யட்டும்?

"ஊர் சுற்றியோட, ஊர் சுற்றத் தெரிந்தது ; படம் பார்க்கத் தெரிந்தது. **விரலைத் துவைக்கிற குழந்தையா நீ.**

"அப்பா வருவது தெரிந்தது !
வாயிலைக் கடக்கவில்லை."

அல்லி ஓடினாள்! அப்பா காலில் விழுந்தாள்! எட்டு வைக்க முடியாமல் கட்டிப் பிடித்தாள்! 'அப்பா என் குற்றங்களைப் பொறுத்துக் கொண்ட **ஏிமலை நீங்கள்!** எவ்வளவு காலம் என்னைப் பார்க்காமல், வாய் திறக்காமல் **'ஊமை'** வாழ்வு நாம் வாழ ஆயது! **இன்றாவது ஒருசொல் சொல்லுங்கள்!** அப்பா! அப்பா! என்றாள்!

"எழுந்திரு! எழு கதிர் தந்த வாழ்வு என நினைத்துக் காலமெல்லாம் வாழ்க "அது போதும்! என அல்லியை அப்பா அரவணைத்துத் தூக்கினார். **கரைந்தெழும் கண்ணீரின் ஆற்றல் விளக்கமாகிய காட்சிகளுள் ஒன்றாயிற்று அது.**விடியலிலேயே மதியும் தவமும் வந்து விட்டனர். அடுத்துக் கதிரும் புகழேந்தியும் துணையும் வந்து விட்டனர். வரவேற்க ஓடிய அல்லி மூவரையும் ஒன்றாய் நிறுத்தி ஒவ்வொருவர் காலையும் தொட்டு வணங்கினாள் ! மாமி அல்லியை அரவணைத்துக் கொண்டு, நலமாக வாழ்க, என வாழ்த்தினார்.

வேட்டின் ஓசை கேட்டது. மாப்பிள்ளை வீட்டார் புறப்பட்ட அறிகுறி. தட்டு தாலங்களுடன் வந்தவர்களை அனைவரும் வரவேற்றனர். தாய்மாமன் மாமியர் பெற்றோர் நேர் நேர் அமர்ந்து **தட்டுமாற்றிச் சந்தனம் பூசிக் கொண்டனர்.** திருமண நாளையும் மாப்பிள்ளை வீட்டார் தீர்மானித்துக் கொண்டு வந்திருந்தனர். பெண் வீட்டாரிடம் கலந்து பேசியே தீர்மானித்த நாள்தான் அது.

அல்லி ஒரே மகள் ஆதலால், பெண்வீட்டாரே திருமணம் நடத்துதல் என முடிபு செய்தனர். பெண்ணுக்குரிய உடையையும், மாப்பிள்ளைக்குரிய உடையையும் தர, அவர்கள் உடைமாற்றிக் கொண்டு அவையின் முன் போடப்பட்டிருந்த நாற்காலியில் தோழன் தோழியர் உடனாகி அமரச் செய்தனர்.

அல்லியின் பக்கம் நின்ற தோழி 'முழுமதி' ! கதிர், புகழேந்தி, தனம் மூவரும் அல்லியைப் பார்ப்பதனினும் **முழுமதியைப் பார்ப்பதில்** ஆர்வம் காட்டினார். தனம் தம் கணவரிடம், காதோடு காதாக ஏதோ சொன்னார். கதிர் அதைக் கேளாததுபோல் இருந்தான். தவச் செல்வியார் கதிரின் பெற்றோர் பேசுவதையும் மதியை ஆர்வமாய்ப் பார்ப்பதையும் கண்டு உள்ளுள் மகிழ்ந்தார்.

அல்லி எழுந்து அனைவரையும் வணங்கினாள். அருகில் அமர்ந்திருந்த அழகப்பனும் எழுந்து வணங்கினான். அல்லி பக்கத்தில் இருந்த விளக்கை ஏற்றினாள். மதி, அல்லிக்குத் துணையாக நின்றாள். அல்லியும் அழகப்பனும் மீண்டும் அவையை வணங்கிவிட்டு உள்ளே சென்றனர். அடுத்து அனைவரும் உண்டு மகிழ்வாக விடை பெற்றனர்.

♦♦♦

# 8. அறிமுகம்

கதிரின் அம்மா அப்பா; மதி, தவம் ஆகியவர்கள் இருந்தனர். மதியும் தவமும் அல்லியோடு இருந்தனர். தனம் கதிரிடம், 'அல்லியின் தோழியாக நின்றாளே அவளைப் பார்த்தாயா?

**"என்னோடு படித்தவள்; முழுமதி பெயர்.**

"எங்கே இருக்கிறாள்?

"இதே மேட்டுக் குப்பத்தில் முன்னே இருந்து, அல்லியோடு படித்தவள். இப்போது **வடலூரில்** உள்ளாள்!"

"உனக்குப் பிடித்தால் அவளைப் பார்க்கலாமா?"

**"அம்மா, வேலை பார்க்காமல் நான் திருமணம் செய்ய மாட்டேன்** என்று அல்லிக்குச் சொன்னது, முழுமதிக்கும் தானே; வேறு வேறு எண்ணிக் குழம்புவானேன்?"

"புகழேந்தி, தாயும் மகனும் உரையாடத் தொடங்கியதும் நாம் எழுந்து ஓரத்தில் அமர்ந்து கேட்பவராக மட்டும் இருந்தார். " **மதியையும், அவள் அம்மாவையும் எங்களுக்கு அறிமுகம் செய்வாயா?**

**"செய்வேன்! ஆனால் மணப்பேச்சு எதுவும் பேசக்கூடாது.**

"அப்பா, உங்கள் எண்ணம் என்ன?

"நீ சொல்வது சரிதான், அல்லியைப் பார்க்க வந்த இடத்திலேயே, அவள் தோழியைப் பற்றிப் பேசுவது முறையில்லை, ஒருநாள் வடலூருக்குப் போவதுபோல் போய், அவர்கள் வீட்டுக்கும் போகலாமே! "அப்பா சொல்வது சரிதான்! ஆனால், அவளும் வேலை தேடுகிறாள். நானும் வேலை தேடுகிறேன். என்னைப் போல அவளும் வேலை கிடைத்தபின் தான் 'மணம்' என்று சொல்லலாம் அல்லவா! "சொல்லலாம் என்றார்" புகழேந்தி. கதிர் தங்கள் நாற்காலிகளுக்கு முன் இரண்டு நாற்காலிகளைப் போட்டான். உள்ளே சென்றான். மதியையும், அம்மா தவத்தையும் அழைத்தான். "உங்களைப் பார்க்க அப்பாவும் அம்மாவும் விரும்புகின்றனர் என்றான். இருவரும் வந்தனர். பெற்றோர் இருவரும் எழுந்தனர்.

மதி இருவரையும் வணங்கினாள்.

தவம் கும்பிட்டார். முன் நற்காலியில் அமரக் கூறினர். அம்மா நாற்காலியில் அமரமாட்டார் என்றாள் மதி. அம்மா பெயர் **தவச்செல்வி**;

அப்பா பெயர் **தவமணி.** அதனால் நான், **'தவ முழுமதி'** என்றாள். "என் பெயர் புகழேந்தி; நான், கதிர் அப்பா. "இவர் கதிர் அம்மா; தனமணி. "நாங்கள் வடலூர்க்கு வரும்போது, உங்கள் வீட்டுக்கு வருகிறோம்.

"நீங்கள் கங்கை கொண்டான் வந்தால் எங்கள் வீட்டுக்கு வந்து செல்லுங்கள்" என்று தம் முகவரி அட்டையைத் தந்தார். அவர்களிடமும், அல்லி வீட்டாரிடமும் விடைபெற்றுக் கொண்டனர்.

"அல்லியின் தந்தையார், "நல்லவகையில் **'மண உறுதி'** நிகழ்வை நடத்தி வைத்த நீங்கள், **மணவிழா**வுக்கும் வந்து நடத்தித் தர இப்போதே கேட்டுக் கொள்கிறேன் " என்றார். நம் வீட்டு மணம் தானே ! முதல் நாளே வந்துவிடுவோம் என்றனர். கதிர் முதல் மூவரும் கங்கை கொண்டான் புறப்பட்டார். தனம், கதிரிடம் "**முழுமதிக்கு அப்பா இல்லையா** ? என்றார். "ஆம் ! அவர் வடலூர் சன்மார்க்க சபையில் காவலராக இருந்தார். வீடு மேட்டுக்குப்பம். வேலைக்குப் போய்வர வாய்ப்பாம் என்று மேட்டுக்குப்ப வீட்டை விற்று விட்டு, வடலூரில் வீடு வாங்கினார். நல்ல கட்டான உடலும் தோற்றப் பொலிவும் உடையவர்."

அவருக்கு ஏற்பட்ட மாரடைப்பு அவரைக் காவு வாங்கிக் கொண்டது. கொஞ்சம் காடு இருந்தது. அதை விற்றுத்தான் மதியை அம்மா படிக்க வைத்தார் என்றான்.

"மதி வேலைக்குப் போய்ச் சம்பாதித்தால் தான் குடும்பத்துக்கு வாய்ப்பு இல்லையா" என்றார் தனம்.

"இப்பொழுதும் வறுமையர் இல்லை. தவச் செல்வியார், கருமித் தனம் இல்லாத, சிக்கன வாழ்வினர். எளிமையாக வாழ்வு நடத்த வல்லவர்; அவர்க்குத் தக அமைந்தவள் முழுமதி."

ஏதேதோ கேட்க நினைத்தவர் கதிரின் உறுதிப்பாட்டை எண்ணிக் கேளாது அடக்கிக் கொண்டார்.

ஆனாலும், அவருள் கதிரையும் மதியையும் இணைத்துப் பார்க்க முடியாமல் இருக்க முடியவில்லை. தாய்மனத்தின் இயல்பு அது; அத்தகையதாய் மனம் தன் மருமகளாக ஒருத்தி வந்த பின்னர், அத்தாய் மனமாகவே இருக்கிறதா? வேறு மனம் ஆவது ஏன்? பெற்ற மகளாகவே இருக்கிறதா? வேறு மனம் ஆவது ஏன்? பெற்ற மகளாகவே கருதினாலும், அவர்களை விட்டுத் தனித்து வாழுதற்குக் குரங்குப் பிடியாக இருக்கும் மருமகளும் உள்ளார் தாமே;

♦♦♦

# 9. வேலை கொட்டிக் கிடக்கிறதா?

முதுகுன்றத்து நண்பர், கதிருக்கு மணப்பெண் பார்ப்பதாகப் புகழேந்தி கூறியதால், ஒரு **கணியரை** விடுத்திருந்தார். அவர் **கணியரும் மணத்தரகரும்** ஆவார்.

புகழேந்தியாரைக் கண்டு வணங்கினார். வந்த செய்தி உரைத்தார். பெண்கள் பலர் படங்கள், குறிப்புகள் எனக் கட்டை அவிழ்த்தார்.

"கதிர், இவர் கணியர். என் நண்பர் விடுத்துள்ளார்"

**"அப்பா, புகழேந்தி மகன், புகழேந்தி தான்! இரண்டு பேச்சு எனக்கு இல்லை!"**

"வேலை கிடைத்து உறுதியான பின்னர்த்தான் பெண்பார்ப்பு. அவர்க்குக் கைச் செலவுக்குத் தந்து விடுத்து விடுங்கள். இன்னும் ஒன்று. பெண், **மணத்தரகர் வழி நான் பார்க்க மாட்டேன். நானே பார்ப்பேன்; நீங்களும் அம்மாவும் இசைந்தால் மணம் செய்வேன்; இது முடிந்த முடிபு**" என்றான்.

"தம்பி விருப்பப்படி செய்யுங்கள்; என் துணை ஏதாவது வேண்டும் என்றால் நான் காத்திருக்கிறேன்" என்று புறப்பட்டார் கணியர்.

கணியர் சென்றபின், அப்பாவும் ஏதோ வேலையாகப் புறப்பட்டார். அம்மா தனம் அடுக்களையில் இருந்தார்.

செல்பேசியில் "மதி என அழைத்தான்; வணக்கம் என்றாள்" **கதிர் நம் தோழமைச் சந்திப்பு, அருமையாக நிறைவேறிவிட்டது. இனி மணமேடை செல்ல வேண்டியது தான்!**

**"நாம் இரண்டு பேருமா?"**

**"போட்டி பாட்டி எல்லாம் விட்டு இப்பொழுது தொட்டு, 'கதிர்' என்றும் 'மதி' என்றுமே இருப்போம்."**

**"உத்தரவு! சொன்னேன் நாமாக இருப்போம் என்று, இப்பொழுது தானே ."**

"வீட்டுப் புறாவைக் கொண்டு காட்டுப்புறாவைப் பிடிப்பது போல உங்கள் பெற்றோரை என் தாய்க்கு அறிமுகம் செய்துவைத்து விட்டீர்கள்"

"ஊடே ஊடே என் பேச்சும் வரும்; அம்மாவுக்கும் உள்ளுள் ஏதோ வேலை செய்வது போல் உள்ளது. தவச் செல்வி என்றாலும் தவமகளுக்குச் செய்யும் கடமை உள்ளதே!"

"அங்கேயே என் அம்மா உன்னை நோக்கத் தொடங்கிவிட்டார். உனக்குள்ள இக்கட்டு எனக்கும் இல்லாமல் இல்லை. இன்றைக்கு அப்பா முன் ஒரு கணியர் வந்து படங்காட்டத் தொடங்கிவிட்டார்."

உங்களுக்கென்ன **ஆண்பிள்ளை**; பளிச்சென்று தோன்றும் ஒருத்தியை விரலைக் காட்ட வேண்டியது தானே!

"கொஞ்சம் பொறு; கணியர் முன்னால் தான் உள்ளார்; மாப்பிள்ளைகளுள் பளிச்சிட்டால் போல் தோன்றுபவரை **நீ விரலைக் காட்டு**! நான் நடத்தி வைக்கிறேன்."

"**வம்புப் பேச்சை விட்டு வாழ்க்கைக்கு வாருங்கள்**! அல்லி மணம் நடக்கும். நமக்கு வேலை தேடவேண்டும்! அதற்குப் பின், நமக்கு **நம் பெற்றோர் மேடை தேட வேண்டும்**."

"என் உறுதிக்கு மேம்பட்ட உறுதி உங்களுக்கு உண்டு. எனக்கு என் தாய் எதுவும் பேசார்! **இடரெல்லாம் உங்களுக்குத்தான்**;"

"மதி, மெய்யாகத்தான் பேசுகிறாயா?"

"மெய்யிலும் மெய்யாகப் பேசுகிறேன்"

"சரி, நான் என்ன செய்ய வேண்டும்?"

"எனக்கும் உங்களுக்கும் வேலைதேட வேண்டும்! **எனக்கில்லை என்றாலும் உங்களுக்கு மட்டுமாவது வேலை தேட வேண்டும்**; அதற்கு முன் '**மணமேடைப் பேச்சுக்கு**' இடமே இல்லை!"

**"வேலை என்ன கொட்டிக் கிடக்கிறதா?"**

"உழையாமல், களத்தில் தவசமே கொட்டிக் கிடக்காது!"

"பொறு! பொறு! ஏதோ ஓரஞ்சல் பெட்டியில் விழுகிறது பார்க்கிறேன்."

“பார்த்தபின் எனக்குச் சொல்லும் செய்தி இருந்தால் பேசுங்கள். வணக்கம்.”

‘கதிர்’ பேசியை நிறுத்திவிட்டுப் பெட்டியில் விழுந்த கடிதத்தை எடுத்தான். வியந்து போனான்; **நெய்வேலி, கரிக் கட்டி ஆலை மேல்நிலைப் பள்ளி நேர்காணல்.**

மீளவும் பேசி ஒலித்தது

“மதி, நீ தவமதி தான்;”

“என்ன, சொல்லுங்கள்!”

“எனக்குக் கரிக் கட்டி ஆலை நேர்காணல் வந்துள்ளது.”

“என்கை கங்கை கொண்டான் வரை நீளாது.”

“நீண்டால்?”

“உங்கள் வாயில் தேன் பெய்திருப்பேன்;”

“வேலை கிடைக்கட்டும்.”

“உனக்கும் நேர்காணல் வந்தால்”

“உங்கள் விருப்பப்படி”

♦♦♦

# 10. உப்பு - சப்பு

"அல்லி திருமணம் ஞாயிற்றுக் கிழமை!"

நேர்காணல் வெள்ளிக் கிழமை

எதற்கும் எதுவும் தடையில்லை;

பட்டச் சான்றிதழ், நன்னடத்தைச் சான்றிதழ், பரிசுகளின் சான்றிதழ் என எல்லாவற்றுக்கும் படிஎடுத்தான் கதிர். படி எடுக்கும்போது, அவன் பேசி ஒலித்தது.

"**உலரச்சுப்படி**"யெடுக்கும் நிலையத்தின் முன் வந்தான்.

"கதிர், வணக்கம். எனக்கும் நேர்காணல் வந்துள்ளது."

"தவச் செல்வியார் அருள்; மதி, கங்கை கொண்டானில் இருந்து வடலூர்க்கு என் கை நீளாது. நீண்டால் **உன் வாயில் நான் தேன் பெய்ய மாட்டேன்! அம்மா வாயில் பெய்திருப்பேன்.**"

"இதிலும் கூட எனக்கு ஏமாற்றம் தானா?"

"**அம்மாவுக்கு இளமை திரும்புகிறது**" என்றாய் அல்லவா!

இளங்குழந்தைக்குத் தானே 'தேனைப்' புகட்டுவது வழக்கம்!

"எந்தச் சிறிய செய்தியும் மறக்க மாட்டீர்கள்!"

"நீ தந்த கொடை வளம் அது."

"நேர்காணல் என்ன, வேலை ஆணையில்லையே!"

"ஆணையாகவும் ஆகிவிட்டால், அது,"

"**கைக்கு வெண்ணெய் வருமுன், 'நெய்யாகவே வந்தது' போல்தான்!**"

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்" குறள் (666)

என்பது பொய்யாமொழி. வெறும் எண்ணத் திண்மையை அவர் கருதிக் கூறவில்லை. '**வினைத்திட்பத்**' திண்மை கருதியே கூறுகிறார். அது போற்றப்பட்டால், நமக்குக் கட்டாயம் வேலை கிட்டும்!

"பரிந்துரை, பணம் என ஊடாடும் இடங்களில் அஃது எட்ட முடியாது."

"நேர்காணல் முடியும் அன்றே தெரிந்துவிடாது; அதற்குள் திருமணமும் முடிந்துவிடும்;"

"நீ வேண்டும் தகுதிச் சான்றுகளைப் படி எடுத்து வை. ஒன்றுக்கு இரண்டாக எடுத்தால் பின்னும் பயன்படலாம்;"

நேர்காணல் கரிக்கட்டி ஆலைக் கல்வித்துறை அலுவலர் அலுவலகத்தில் நிகழ்ந்தது.

எழுகதிரும் முழுமதியும் போகுமுன்னரே பலர் அமர்ந்திருந்தனர். ஆடவர் மகளிர் என இருபால் ஆசிரியரும் இருந்தனர். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் இடம், விருப்ப ஓய்வு பெற்றுச் செல்வோர் இடம் என அறுவருக்குமேல் தேர்ந்தெடுக்கப் பெற இருந்தனர். இருபது பேர்க்கு மேல் அங்கே இருந்தனர். மேலும்,

**தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி, மேனிலைப் பள்ளி** என நால்வகைப் பிரிவுக்கும் தனித்தனி நேர்காணல் இருந்ததால் கூட்டம் மிகுதியாக இருந்தது. மேனிலைப் பள்ளி நேர்காண்பார் வரிசையில் இருவரும் அமர்ந்தனர். **முழுமதி நாலாமவராகவும், எழுகதிர் பத்தாமவராகவும்** அழைக்கப்பட்டனர்.

ஏறத்தாழ விண்ணப்பத்தில் இருந்த சான்றிதழ்கள், குறிப்புகள் சரியாக உள்ளனவா என்று ஒப்பிட்டுப் பார்த்தும், சில வினாக்கள் வினாவுதலாகவும் இருந்தது.

நேர்காணல் கண்டவர் அங்கே நின்று உரையாடல் கூடாது; போகும் வழி வேறு; திரும்பும் வழி வேறு. என இருந்ததால், நேர்காணலர் சந்திக்கவோ பேசவோ இயலாமையாயது. முதல் அரைமணிக்குள் வெளியேறிய முழுமதி, அலுவலகத்திற்கு வெளியே ஒருமணி நேரம் கதிரை எதிர்பார்த்திருக்க அவன் வந்தான்.

முழுமதி உன் நேர்காணல் எப்படி?

சான்றிதழ்களைப் பெற்றனர் சரிபார்த்தனர். வேறு சிறப்புத் தகுதி என்றனர். கல்லூரி முதன்மை, பல்கலைக்கழக முதன்மை போட்டிகளின் வெற்றி விருதுகள் என்பவற்றைப் பரப்பினேன்! இவ்வளவு வெற்றிகளா ? நீங்கள் உங்களிடம் படிப்பவர்க்குப் படிப்பிக்காமலே உண்டாகும் ஊக்குதல்; எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு செல்லுங்கள் என்றனர். நான் வணங்கி விடை பெற்றேன்.

"உங்கள் நிலை என்ன என்றாள் முழுமதி !"

**"நான் பெண்ணாகப் பிறக்கவில்லை. பெண்ணாகப் பிறந்தாலும் முழுமதியாகப் பிறக்கவில்லை!"**

"நடந்ததைச் சொல்லுங்கள்."

"நீங்கள் படித்த கல்லூரியில், எல்லா முதன்மையையும், விருதையும் முன்னே நேர்காண வந்த **முழுமதியும்,** நீங்களும் பங்கிட்டுக் கொள்வது ; வேறு எவருக்கும் எவ்விருதும் போய்விடக் கூடாது என்று போட்டி போட்டுக் கவர்ந்து கொண்டீர்களா ? அவர் பரப்பியதும் நீங்கள் பரப்புவதும் திகைக்க வைக்கிறது" என்றனர். எனக்கோ நாணமும் நகைப்பும் உண்டாக, என்னுள்ளே நான் என்ன நேர்காணலுக்கு வந்தேனா, பாராட்டு விழாவுக்கு வந்தேனா என எண்ணிக் கொண்டேன்.

எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, **உன்முன்னே, அடங்கி ஒடுங்கிக் கிடப்பது போல வெளியே வந்தேன்.**

"வர வர நீங்கள் நன்றாகத் **தேர்வடம்** விடுகிறீர்கள்."

கயிறு திரித்து, கமலை வடம் திரித்து, இப்பொழுது தேர் வடம் திரிக்கிறீர்கள்!

**"என்முன்னே அடங்கி ஒடுங்கிக் கிடப்பதை நேர்காணலில் சொல்லியிருக்கலாமே!"**

"நான் நேர்காணலில் தானே சொல்கிறேன்.

"என் நேர்காணலில் இல்லை. உங்களை அலுவலர்கள் நேர்காணல் கண்டார்களே அவர்களிடம் !"

"கொஞ்சம் இரு! **முழுமதி உங்களிடம் சொல்லச் சொன்னதைச் சொல்ல வந்துள்ளேன்** என்று சொல்லிவிட்டு வரட்டுமா ?"

"போட்டி வேண்டாம் ! போட்டி போட்டது போதும் ! என்று சொல்லியும் நீங்கள் விடவில்லை!"

"மதி, **போட்டியில்லாத வாழ்வு, சுவையில்லாத வாழ்வு! விளையாட்டுப் போட்டி போல வேலை, குடும்பம், வாழ்வு, உரையாடல் இருந்தால் தான் சுவைக்கும்! இல்லையானால் "உப்புச் சப்பு" இல்லாத வாழ்வாகிப் போகிவிடும் !**

"அதென்ன சப்பு! இனிப்பு! சப்பிச் சாப்பிடுவது அது தானே!"

"அப்படியானால் நான் உப்பு! நீங்கள் சப்பு!"

"சரிதாங்க! துள்ளுவண்டியில் துள்ளாமல் ஏறுங்க"

"சரிங்க"

♦♦♦

# 11. பளிச்சொளி

முதல் நாளே மேட்டுக்குப்பத்திற்குப் புகழேந்தியார் குடும்பம் வந்து விட்டது. அதற்கு முன்னரே தவச்செல்வியாரும் முழுமதியும் வந்து விட்டனர். புகழேந்தியாரும் மனைவி மகனும், திருமணம் வடலூரில் ஆதலால், மணமண்டபத்துக்கே சென்று விட்டனர். முழுமதி அல்லியின் தோழியாதலால் தவச்செல்வியும் முழுமதியும் மேட்டுக்குப்பம் சென்று விட்டனர்; அங்கேயே தங்கவும் செய்தனர்.

கதிர், மண்டபம் மேடை, சமையல் எனக் கண்காணித்தான். காலை 9.30 – 11.00 திருமணம். காலை உணவு முடிக்கவும் திருமணம் நிகழவும், செல்லுவார் செல்லவும், தங்குவார் நண்பகல் உணவு கொள்ளவும் ஏந்தான பொழுதாக இருந்தது. மணமக்களை மேடையில் அமர்த்தி **வல்லாளனார்** வரவேற்றார். தமிழ்முறைப்படி பெரும்புலவர் **தங்கவேலனார்** திருமணம் நடத்தி வைத்து வாழ்த்துக் கூறினார். அவர்,

வாழ்த்தும்போது பழநாள் தமிழர் காதல் வாழ்வுச் சிறப்பை உலகமே போற்றியது. அதன் சான்று ஒன்று: **இங்கிலாந்திலே** சுரங்கத் தொடர்வண்டி நிலையத்தில் குறுந்தொகைப் பாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. அது,

"உன்தாயும் என்தாயும் எவர் எவரோ?
உன் தந்தையும் என் தந்தையும் எவர் எவரோ?
நீயும் நானும் எவ்வாறு அறிவோம்!
முன்பின் அறியா நாம் சந்தித்தபோது
பண்படுத்தப்பட்ட நல்ல பயிர் நிலத்தில்
மழை பெய்ததுபோல் நம் நெஞ்சம் ஒன்றுபட்டுக்
கலந்து விட்டனவே என்று வியந்தான்" என்பது.

ஆனால், உறவானவரும் அப்படி ஒன்றுபடல் உண்டு; அதைப் பெற்றோர் ஏற்றுக் **கூடுதுறைபோல் கூடி மணம் செய்வித்து மகிழ்வதும் நடைமுறையே** என்பதைக் காட்டுவது இந்தத் திருமணம்! ஆதலால், மணமக்களை அன்றி, அவர்கள் பெற்றோர்களின் நயத்தக்க நெஞ்சத்தையும் செயற்பாட்டையும் பெரிதும் பாராட்டுகிறேன்.

மணவாழ்வுச் சிறப்புக்கு மணமகனும் மணமகளும் ஒன்று பட்ட உள்ளத்தராய் ஒருவரை ஒருவர் பாராட்டுதல் வேண்டும். பாராட்டுதல் செய்யும் பயன், ஆமையாய் நகர்வாரையும் மானாகத் துள்ளி ஓடவைக்கும்; புறாவாகப் பறக்கவும் வைக்கும் தயிர்ப்பச்சடி வைக்கிறாள் ஒரு பெண்; மணப்பெண்! அவள் கட்டியது புத்துடை. அடுப்பில் தாளிப்புக்கு எண்ணெய் விட்டுக் கடுகு பருப்பு கறிவேப்பிலை முதலியவும் போடப்பட்டது. உடை சற்றே நழுவுகிறது. அவள் ஒருகையில் உடையை நெகிழாமல் பற்றிக் கொண்டு, பதன்கெடாமல் தாளிப்பை முடித்து விடுகிறாள். கணவன் உண்கிறான். உண்ணும் போது, **'இனிது'** என்றான்! அந்தச் **"சிறு குறும் பாராட்டு"** கதிர் வரக் கண்ட தாமரை போலவும், மதிவரக் கண்ட அல்லி போலவும் அவளை முகமலர்ந்து மகிழச் செய்தது என்பது. இல்லற வாழ்வு சிறக்க, **சற்றே அரை குறை இருந்தாலும் வாழ்த்துங்கள்; பாராட்டுங்கள்! அது, இல்லற இன்பத்தைப் பெருக்கி, உற்றார் உறவை மகிழ்விக்கும்**! என வாழ்த்தினார்".

மணமகன் தந்தை **முருகப்பனார்** நன்றி கூற வந்தார். வணங்கினார். திருமணத்தை நடத்திய தங்க வேலனார்க்கு எங்கள் இருவீட்டார் சார்பிலும் நன்றி கூறுகிறேன். திரளாகக் கூடியுள்ள உற்றார் உறவுகளுக்கும் அன்பு நண்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திருமணம் சீரும் சிறப்புமாக நிகழ இருந்த பெருமகனார் **புகழேந்தியார்.** அவருக்கு, எங்கள் இரு குடும்பத்தாரும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் வாழ்வு **"பகையை நட்பாக்கும் பண்பு வாழ்வு" என்பதை நாம் அனைவரும் போற்றி வாழ்ந்தால், வீடும் நாடும் சிறக்கும்** என்று பாராட்டி, நீங்கள் உணவருந்திச் செல்லுமாறு வேண்டிக் கொள்கிறேன். வணக்கம் என்றவர், இப்பொழுது மணமக்கள் உங்களை நாடி வருவர். அவர்களுக்கு முன்னே உதிரிப்பூ வரும்! நீங்கள் அதனை எடுத்துத் தூவி வாழ்த்துமாறு வேண்டிக் கொள்கிறேன் என்றார். அவ்வாறே அரை மணிப் பொழுதில் அருமையாகத் திருமணம் நிறைந்தது.

அல்லி பக்கம் முழுமதி நின்றாள்
அழகன் பக்கம் எழுகதிர் நின்றான்.
நால்வரும் ஒருங்கு நிற்க,
படப் பிடிப்பின் பளிச் சொளிகள் மின்னலிட்டன.

♦♦♦

## 12. புன்னகைப் பூக்கள்

எதற்கும் முன்வராத தவச்செல்வி, தனம் புகழேந்தி இருக்குமிடம் வந்தார். **"வடலூர் வந்தால் எங்கள் வீட்டுக்கு வருவதாகச் சொன்னீர்கள். இயல்பாக வாய்த்துள்ளது.** மதிபோல் என் அன்பு மகள் தானே அல்லி. அதனால், நண்பகல் உணவை முடித்து விட்டு அங்கே போகலாமே" என்றார்.

தனமும் புகழேந்தியும் "நாங்கள் நினைத்ததை உங்கள் வாய் உரைக்கிறது. அப்படியே செய்யலாம்" என்றனர். தவம், மதியை அழைத்துக் கதிர் அப்பா அம்மா நம்வீட்டுக்கு வருகிறார்கள். அதனால் கதிர்க்குச் சொல்லி, நீங்களும் உணவை முடித்துவிட்டுப் போகி விடலாம் என்றார்.

மதி கதிரிடம் போனாள்! விண்ணில் இருந்து வந்து மண்ணில் உலாவும் மதியே, அடியேன் **என்ன செய்ய வேண்டும்! "இந்தக் குறும்பை எல்லாம் விட்டு விட்டு, அம்மா அப்பாவோடு எங்கள் வீட்டுக்கு வர வேண்டும்!**

"அப்படியே ஆகட்டும்! **அப்பா அம்மாமுன் அலுங்கப் பேசாத அடக்கமான பிள்ளை நான். பிறகு, நான் நான் தான்!"**

**"எங்கள் அம்மா முன்!**

நான், விளையாட்டுப் பிள்ளை!

"நீங்களும் உங்கள் பச்சோந்தித் **தனமும்!"**

"என்னை எதுவும் சொல், **தனம்** என்று அம்மாவைச் சேர்த்துச் சொல்லாதே!".

**"ஐயோ, உங்களை என்ன சொல்கிறது!"**

**"ஒன்றும் சொல்லாமல் வா!**

இருவரும் வந்தனர். மதி, கதிரின் அப்பா அம்மாவை வணங்கினாள்".

நாங்களே நம்வீட்டுக்கு வர நினைத்தோம்! அம்மாவும் அழைத்தார். உணவை இங்கேயே முடித்து விடலாம். இதுவும் நமக்குரிமை இடம் தானே என்றனர்".

இப்பொழுது உண்ணலாமா! பொழுதாக வேண்டுமா?

பசியில்லை; ஆனாலும் பேருக்கு உண்டு, நம் வீட்டைப் பார்த்து விட்டு உடனே கங்கை கொண்டான் போக வேண்டும்!

சரி, நான் பார்த்து வருகிறேன் என்று மதி பந்தியைப் பார்க்கப் போனாள்!.

என்னப்பா, தவச் செல்வியாரிடம் ஏதாவது பேசலாமா?

அப்பா, நேர்காணல் தானே முடிந்துள்ளது; **ஆணை வரட்டும்; இயல்பாக வந்தது போல் பார்த்து விட்டுப் போய் விடலாம்**".

மதி, பந்திக்கு அழைத்தாள்.

தவச்செல்வியார், ஓர் ஓரத்தில் போய் அமர்ந்துண்டார். புகழேந்தியார் தனம்மாள், கதிரை உட்கார வைத்து விட்டு, மதி அம்மா பக்கம் போய்விட்டாள்.

"**நீ அவர்களோடு சாப்பிட்டிருக்கலாமே!**"

"அம்மா, கதிரைப் பார்த்தபின் நீங்கள் குழந்தையாகி விட்டீர்கள்."

"உங்களுக்கு ஊட்டி விட வேண்டாமா"

"என்னடி சொல்கிறாய்?"

"**கதிர்தான் சொன்னார்**; நீங்களும் அவரும் விளையாட்டுப் பிள்ளைகளாம்".

"**தம்பி, சொல்லுச்சா!**"

"அவரிடமே கேட்டுக் கொள்ளுங்கள்".

"எனக்கு ஊட்ட வேண்டாம், சாப்பிடு". **அவர் என்னோடு சண்டை போடுவார்! "ஒருவாய், ஒரே ஒருவாய் - ஆக்காட்டுங்கள்!".**

"**நீயும் தம்பிமாதிரி ஆயிட்ட!** ஆக்காட்டினார்!"

"ஊட்டினாள் மதி!"

"அனைவரும் உண்டு மணமக்களிடமும் மணவீட்டாரிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டனர். வண்டியில், **கதிர் முன்னால் அமர்ந்தான்**. புகழ், தனம், மதி தவம் நால்வரும் பின்னே அமர்ந்தனர்".

கதிர்க்கு வீடு தெரியுமாதலால் வீட்டின் முன் வண்டி நின்றது. தவச் செல்வி திறவு தர, மதி கதவைத் திறந்து அழைத்தாள். மேட்டுக் குப்பத்திற்குச் செல்லுமுன்னரே கதிர் வீட்டார் வருவர் என்று, இருக்கை ஒழுங்குறுத்தி வைத்தே சென்றனர். தவச் செல்வியார் உள்ளே சென்றார். மதியும் உடன் சென்றாள். **புகழேந்தியார் தேநீர் விருப்பர்** என்பது மதிக்குத் தெரியும்.

அதனால், நான்கு குவளைகளில் தேநீர் கொண்டு வந்தாள் மதி.

"மதி, இப்பொழுது தானே உண்டோம்".

"'நீங்கள் தேநீர் விரும்பி' என்பதைக் கதிர் வழி அறிவேன். **உங்கள் பெயரே வழிகாட்டி**, வெண்பாவில் புகழேந்தி"- நளவெண்பா இயற்றியவர்.

"ஒன்றா உலகத்து உயர்ந்த **புகழல்லால்**

பொன்றாது நிற்பதொன் றில்"

என்பது வள்ளுவம்.

**"கதிர் கூடச் சொல்லவில்லையே!"**

"அவர் கல்லூரி பாராட்டும் பேச்சாளி! உங்கள் முன் **அடக்க ஒடுக்கமான பிள்ளை!"**

"சரி தேநீர் ஆறிவிடும்!"

"அது ஆறினாலும் குறையில்லை. இந்தப் பேறு கிடைக்குமா என்றார் தனம்மாளுக்கும் எடுத்துத் தந்தாள். **கதிர் முன் தட்டை நீட்டினாள்**. ஓட்டுநர்க்கு ஒரு குவளை தந்தாள்".

"உனக்கு"

"எனக்கும் அம்மாவுக்கும் சுக்குமல்லி நீர்".

“அதையே தந்திருக்கலாமே!”

**“உணவும் குடிப்பும், அவரவர் பழகியதே சுவையானதில்லையா?”**

**“முழுமதி, முழுமதிதான்!”**

தவம் கதவோரம் நின்று கேட்டுக் கொண்டிருந்தார்.

“சரி, அம்மாவினிடம் சொல்லி விட்டுப் புறப்படுகிறோம்.”

“அம்மா, வந்தார்”

“வணங்கி விடைபெற்றனர்”.

“தம்பி நீங்களுமா? என்றார் தவம். “ஆம் நான், ......”

**“மதியோடு காய் போட்டிருக்கிறேன்”.**

“புன்முறுவல் பூத்தார்”.

அனுப்பிய மதி வந்தாள்.

“என்னம்மா புன்முறுவல்?”

**“கதிரிடம் கேட்டுக் கொள்!”**

**“நல்ல அம்மா, நல்ல தம்பி!”**

“என்னை எதுவும் சொல். நான் பெற்றவள்”.

**அந்தத் தம்பியைச் சொல்லாதே!**

“வாயைப் பொத்திக் கொள்கிறேன், அம்மா”.

“புன்முறுவலோடு மதியின் பொத்திய கையை எடுத்தார் தவம்.”

“நீயும் கூடப் போய் வந்திருக்கலாம் இல்லையா?”

“நீங்களும் கூட வந்திருப்பீர்களா?”

தலை தாழ்ந்தார் தவம்!

தலையை நிமிர்த்தினாள் மதி!

“அப்பா வேலை பார்த்த இடத்தைச் சுற்ற, அவர் இருந்த வீட்டில் முடங்க என இருந்த **உங்கள் நீங்காத் துயர் முகத்தில், புன்முறுவல் பூக்கச் செய்தவர் அந்தக் கதிர்த் தம்பி தானே!”**

**கண்ணீர் வடித்துக் கொண்டு உள்ளே போய்விட்டார் தவம்!**

♦♦♦

# 13. நடைமேடை

கதிரின் பேசி ஒலித்தது.

"வணக்கம், 'கதிர்'."

"வணக்கம், **அழகன்!**"

"**அழகனா?**"

"மணமேடையில் இருந்து அனைவரையும் அனுப்பிவிட்டு, நாங்களும் உணவை முடித்து மேட்டுக்குப்பம் வந்து விட்டோம்".

எங்கள் வாழ்வில் **ஒளியேற்றிய தெய்வங்கள் நீங்களும் மதியும்!**

எங்கள் 'பிஞ்சு நைந்த' உறவும், ஊரைவிட்டு உறவை நீங்கி ஓடும் நிலையும், **தலைகால் தெரியாமல் ஓடச் செய்தவர்கள் நீங்கள்! என்னினும் அல்லி துணிவள்! மதியை உங்களிடம் விடுத்துக் காதலைக் காத்தாள்! நீங்களோ மேலும் ஒருபடி மேலே போய்ப் பகையான குடும்பங்களை உறவாக்கி நாங்கள் நல்லறம் கொள்ள உதவினீர்கள்;** அப்பா புகழேந்தி, புகழேந்தி தான்!

நானும் அல்லியும் நாளெல்லாம் எங்கள் நல்லியல் செயல்களால் இரு குடும்பங்களுக்கும் முழுமையான '**நடைமேடையாக**' இருப்போம். அதைச் சொல்லத்தான் அழைத்தேன். பக்கத்தில் அல்லி இருக்கிறாள்.

"பேசியை அவளிடம் கொடுங்கள்!".

"வணக்கம், கதிர் பேசுகிறேன்".

"அல்லி, அல்லியில் **வெள்ளை அல்லி, செவ்வல்லி என உண்டு. நீ மனத்தூய்மையில் வெள்ளை அல்லி!** அதையே உன் தோழி மதி வழி காட்டினை! இனி வாழ்வில் **செவ்வல்லி!**".

**இல்லறச் செம்மை – நேர்மை!**

**புதுப்பிறவியாக நினை! பொங்கல் வாழ்வாகப் பூரிப்பு அடை! உங்கள் அப்பா அம்மாவுக்கு மேல், உன் மாமன் மாமியிடம் அன்பு செலுத்து!**

இரு குடும்பங்களுக்கும் நீங்கள் இருவர்களே 'குடிதாங்கி'கள்! இனி, அறுவரும் உள்ளத்தால் - ஒத்த அன்பால் - ஒருவர் ஆகுங்கள்! உங்கள் இருவருக்கும் வாழ்த்து. மதிக்கு நான் சொல்வேன்!.

"நன்றி!".

"நீ பேசி முடிக்கட்டும் என்று காத்திருந்தேன். என்னென்னவோ பேசுகிறாய்! என்னிடம் பேசுவதில்லை! என்றார் புகழ்".

"அப்பா, நீங்கள் நடமாடும் 'அறம்' உங்களைப் பார்த்துப் படித்துக் கொண்டிருக்கும் மாணவன் நான். தெய்வத்திடம் பேச வேண்டியது இல்லை! உருகத்தான் வேண்டும்! அது என் கடைப்பிடி".

அவரால் நிற்க முடியவில்லை!

கதிர், காலில் விழுந்தான்!

இருவரும் தழுவிக் கொண்டு, வழிந்த கண்ணீரைத் துடைத்தனர். 'வருகிறேன்' என்று தம் வேலை மேல் சென்றார்.

அம்மா சமையலறையில் இருந்தார்.

"அம்மா ஓய்வெடுங்கள். அப்பாவும் வெளியே போயுள்ளார். நமக்கும் உணவு வேண்டியதில்லை".

அப்பா வந்தபின் இரவுக்கு ஏதாவது பார்த்துக் கொள்ளலாம். நானும் ஓய்வெடுக்கப் போகிறேன் என்று அவன் அறைக்குச் சென்று சாய்ந்தான்.

ஒரு மணி நேரம் கழித்து, பேசி ஒலித்தது!

"கதிர், அம்மா புன்முறுவலோடு இருந்தார்கள். என்ன என்றேன்".

"அதைத் தம்பியிடம் கேட்டுக் கொள் என்று சொல்லிவிட்டார்".

"என்ன செய்தி!".

"அல்லிக்காகத் தூதுவந்து இழுத்தடித்து வேலை வாங்கினை. நேர்காணலுக்கு என் பின்னாக வந்து முன்னே சென்றனை. இவ்வளவு செய்தவனுக்கு, தேநீர்க்குவளையைக் கூடக் கையில் தராமல் தட்டை நீட்டினை! யான் செய்த ஊழியத்துக்குக் கிடைத்த பரிசை

எண்ணினேன்! அல்லி மணத்துடன் என்னை ஒதுக்கி விட்டாய்! அதனால் அம்மாவினிடம்,

"நான் மதியோடு காய் போட்டிருக்கிறேன்"

என்றேன்! உன் காரியம் முடிந்ததால், என்னை ஒதுக்கிவிட்டாய். வேலைக்குக் கூலி இல்லாத இடத்தில் என்ன ஒட்டு உறவு?

"என்ன கூலி நான் தர வேண்டும்?"

"என்ன கூலி தரலாம் என்று அம்மாவினிடம் கேள்! அவர்கள்தாம் எனக்குக் கூட்டு".

"அதுதான் தெரிகிறதே!"

"என்ன தெரிகிறது"

"என்னை எதுவும் சொல்! தம்பியை எதுவும் சொல்லாதே" என்றார்கள்.

"என் வாயைப் பொத்தினேன் நான்!"

"என் கையை எடுத்து விட்டு, புன்னகை பூத்தார்கள்!".

"உங்களால் அம்மாவுக்கு நான் ஊட்டி விட்டேன்".

"அப்படிவா வழிக்கு! 'வாங்கினார்களா'?".

உங்கள் கூட்டாளிக் குழந்தை ஊட்டச் சொன்னது என்றேன்!

'ஆ' காட்டினார்கள்! ஊட்டினேன்! நன்றி. அப்பா வருகிறார்.

♦♦♦

## 14. எல்லாம் ஓடுகிறது

பேசியின் மணி ஒலித்தது. மதிதான் அழைக்கிறாள் எனத் தெரிந்து கொண்டான்.

"நீங்கள் காய் போட்டதைக் கேட்டபின், ஒன்றும் **ஓடவில்லை**".

**"எல்லாப் பேருந்துகளும் ஓடுகின்றன! என்முன்னே துள்ளுந்து ஓடுகிறது. அணில் ஓடுகிறது".**

"உங்களிடம் நான் என்ன பாடுபடப் போகிறேனோ தெரியவில்லை! சொல்வதைக் கேளுங்கள்!".

"இன்னும் தூதா?"

"சொல்வதைக் கேட்கிறீர்களா, வைத்து விடாவா?"

"சொல்!"

உங்களிடம் சொல்ல முடியா நெருக்கடி! வள்ளலார் குருகுலத்தில் ஒரு வேலை வாய்ப்பு; நான் படித்த பள்ளி. பாராட்டுப் பெற்ற பள்ளி. 'நீயேன் விண்ணப்பம் போடவில்லை' என்று எனக்கு ஆசிரியராக இருந்தவர் கேட்டார். 'எனக்குத் தெரியாது' என்றேன். இன்று தான் கடைசி நாள். உடனே போ என்றார். நான் போய் விண்ணப்பம் கொடுத்தேன். நேர்காணலுக்கு மூன்று பேர் வந்தனர். நான் மூன்றாம் ஆளாகப் போனேன்.

என்னை அறிந்த தாளாளர்! உடன் கல்வி அலுவலர், தலைமையாசிரியர் என மூவர். நான் போனதும் தாளாளரும் தலைமை ஆசிரியரும் அடையாளம் கண்டு கொண்டனர். **முழுமதி நலமாக உள்ளாயா என்றனர்.** வணங்கினேன்.

**"இப்போது வடலூர்க்கே வந்து விட்டாயா?"**

"நம் பள்ளி முடித்ததும், கல்லூரிக்குப் போக வாய்ப்பாக அப்பா முன்பு வேலை பார்த்த வடலூர் சன்மார்க்க சபை முன் வாயில் பக்கத்தில் வாங்கியிருந்த வீட்டுக்கே வந்து விட்டோம்".

"அப்பா....."

மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. நானும் அம்மாவும் உள்ளோம் என்றேன். கல்லூரியிலும் நீ நம்பள்ளிக்குப் பெருமை சேர்த்திருக்கிறாய்!

**எனக்கு ஏதாவது வளர்ச்சி என்றால், இப்பள்ளி தானே ஏணி!**

"உன் சான்றுகளைப் பார்த்தோம்!"

"மூலப்படிகள் உள்ளனவா?" என்றனர்.

முன்னை நேர்காணலில் பரப்பியவற்றைப் பரப்பினேன்.

அவர்களுக்கே வியப்பு! கல்வி அதிகாரிக்கோ மிகவியப்பு! வேலைக்கு ஆணை வரலாம் என நம்பிக்கையோடு வந்தேன்!

"அம்மா என்ன சொன்னார்கள்?"

"உடனே தம்பியிடம் சொல். அது சொல்கிறபடிகேள்!" என்றார்.

"காய்போட்டால் எட்டு நாளைக்கு எட்டிப்பார்க்கக் கூடாது."

"நான் வந்தேன் என்றால்"

பின்வாயில் வழி வெளியே போய் விடுவேன்.

**இதைச் சொன்னால் தம்பி உடனே வரும் என்று அம்மா சொன்னார்கள்".**

**"அம்மா சொன்னார்களா?"**

"நீ ஓரத்தில் போய் ஒடுங்கிக் கொண்டால், நான் அம்மாவைப் பார்த்து விட்டு வந்து விடுவேன்".

"சரியா?"

"சரி!"

"அப்பா அம்மாவிடம் சொல்லி விட்டு வருகிறேன்"

"சரி!"

"அப்பா, மதிக்கு அவள் படித்த வள்ளலார் குருகுலப் பள்ளியிலேயே வேலை கிடைக்கும் போல் உள்ளது".

"நல்லதாயிற்று! அவர்கள் வீட்டுக்கு முன்னால் தானே உள்ளது".

"அம்மா என்னைப் பார்க்க வேண்டும் என்றார்களாம்".

"நல்லதாயிற்று! உணவை முடித்து உடனே போய் வா! என்றார்".

“கதிர், எல்லாம் ஆயிற்று! வா சாப்பிடலாம்! என்றார் அம்மா.”

“அப்பா;”

“நீ சாப்பிட்டு விட்டுப் புறப்படு! நான் தோட்டத்தைப் பார்த்து விட்டு வந்து சாப்பிடுகிறேன்”

“வேலை வாய்த்தால், உடனே சேரச் சொல்! நெய்வேலியில் வேறு ஒருவர்க்கு வேலை வாய்ப்பு ஏற்படுமே” என்றார்.

“கதிர் உணவை முடித்து வடலூர்க்குப் புறப்பட்டான். போகும்போது இனிப்பு வாங்கிக் கொண்டான்”.

தவம் முன்வாயிலில் கதிரை எதிர்பார்த்திருந்தார்!

அம்மா என்று வணங்கினான் கதிர். நான் சொல்வதை மறுக்காமல் ஏற்பீர்களா?

**தம்பி சொல்லை, வள்ளலார் சாமி சொல்லாக ஏற்பேன்.**

ஆகாட்டுங்கள்!

ஆகாட்டினார்!

கதிர் ஒரு தேன் மிட்டாயைக் குழந்தைக்கு ஊட்டுவது போல் ஊட்டினான்.

**“தம்பி எனக்கு அம்மா ஊட்டியது நினைவில் இல்லை. நீங்கள் சொல்லியதாக மதி ஊட்டியதால் பெற்றேன். இப்படி ஒரு தம்பி எனக்கு ஊட்டக் கிடைக்குமா?”**

“மதி, கதிர் வந்துள்ளது. என்ன செய்கிறாய்?”

**“உங்கள் கூத்தடிப்பைக் கதவோரம் நின்று பார்க்கிறேன்”.**

**“அவர் ஆயிரம் காய் போட்டாலும், நான் கனி தான்!** தம்பியிடம் கேளுங்கள் நேரில் வரலாமா? என்று!”

“அம்மாவைப் பார்த்ததும் காய்விட்டதைத் திரும்பப் பெற்றுக் கொண்டேன். இப்பொழுது சொல்வதைக் கேள்!”.

“நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை

**கோல முழுதும் காட்டிவிட்டால் உலகம்**
**கொள்ளைக் கடலில் சாமோ?"**

முகத்தை மூடிக் கொண்டு வந்தாள் மதி!

**அம்மாவும் கதிரும் சிரித்தனர்.**

அவள் கையில் இனிப்பு இருந்தது.

**கதிர் 'ஆ காட்டுங்கள்'** என்றாள்! பிடரைப் பிடித்துக் கொண்டு ஊட்டினாள்!

"உனக்கு ஊட்டுகிறேன்" என, வாய்திறந்தாள், ஊட்டினாள் இனிப்பை!

"அம்மா, தம்பி சொன்னபடி கேள்" என்றார்கள்!

தம்பி என்ன சொல்கிறார்கள்?

"அப்பா வேலை பார்த்த இடம்! முன் வாயிலில் வீடு. உனக்கு வேலை, வள்ளலார் குரு குலம்! அம்மா சொல்கிறபடி வள்ளலார் சாமி கொடை" என வேலை பார்!

கட்டாயம் நம் இருவர்க்கும் வேலை வரும். நான் வேலையில் சேர்வேன். இல்லையானாலும் அப்பாவுக்குத் துணையாகத் தோட்டம் பார்ப்பேன்! உனக்கு வேலை கிடைத்ததே எனக்கு வேலை கிடைத்ததுதான்!

"அம்மா, நீங்கள் என்னை என்ன வேண்டுமானாலும் சொல். தம்பியைச் சொல்லாதே என்றீர்களாம். ஆனால் இவள் என்னை என்னவானாலும் சொல்லாம். **என் அம்மாவைச் சொல்லலாமா"** என்றேன்.

"என்ன சொன்னேன் அம்மாவை?"

**'பச்சோந்தித்தனம்'** என்று **சொல்லவில்லையா**? எங்கள் அம்மா **தனம் உனக்கு அவ்வளவு இளப்பமா**?

**தவம் நகைத்தார்**!

"நல்லவேளை" நாம் வெவ்வேறு இடத்தில் வேலை பார்ப்பது! நீங்கள் கூத்தடிக்க முடியாது!

♦♦♦

# 15. ஒரு சுற்று

"தம்பி, நாம் மூன்று பேரும் சன்மார்க்க சபையை ஒரு சுற்றுச் சுற்றி வரலாமா?"

**"எங்கம்மா சொன்னால் இங்கே இருந்து மூன்று சுற்று உருண்டு கொண்டே வருவேன்!".**

"தவம் வாய்விட்டு சிரித்தார்!"

மதி, "**இப்படிச் சரக்கெல்லாம் எப்படி உங்களுக்கு** எடுத்து எடுத்து விட வருகிறது!" என்றாள்.

"சொல்லமாட்டேன் உன்னிடம்; அம்மாவுக்கு நன்றாகத் தெரியும்!".

**"உண்மை தான் தம்பி! யார் முன்னாலும் முகம் பார்த்துப் பேசாத நான்... நான்... கண்ணீர் வழிந்தது! துடைத்தாள் மதி".**

"அம்மா, புரளாமல் வருகிறேன்".

"அம்மா ஒன்று கேட்கட்டுமா?"

"தம்பி, கேளுங்கள்".

"நீங்கள் கண்ணாடி பார்ப்பீர்களா?"

"பார்க்க மாட்டேன்!"

**"என்னை நீங்கள் பார்த்தது முதல் உங்கள் முகத்தில் இருந்த கவலைக் கோடுகள் இருந்த இடம் தெரியாமல் ஒழிந்துவிட்டன!"**

"கண்ணாடி பார்க்காமலே, நான் உணர்கிறேன் தம்பி!"

"இன்றைக்கு நீங்கள் உங்கள் தம்பிக்குச் சோறு படைக்கிறீர்கள்!"

**"இந்தப் பேற்றுக்காகத்தான் இவள் அப்பாவும் நானும் 'தவம்' எனப் பெயர் கொண்டோம் போலும்** என்று பூரிக்கிறேன்".

**"என்ன மதி, பிந்தி விட்டாய்?"**

**"கதிர், உங்களைப் புரிய முடியவில்லை!"**

"உனக்குப் புரியாத அளவும் நல்லது! அம்மாவுக்குப் புரியும்!".

**"தம்பி, என் ஆழ்மனத்துக்கிடந்து பாழ்படுத்திக் கொண்டே இருந்த துயர்களெல்லாம் எப்படி தம்பி போயின!".**

**"அம்மா நீங்கள் நானாகி விட்டீர்கள்! நான் நீங்களாகி விட்டேன். அவை போயொழிந்தன!"**

**"தம்பி, உங்கள் காலைக் கட்டி அழ வேண்டும் போல் உள்ளது!"**

"கதிர், அவர் வாயைப் பொத்தினான்! **மீள ஒருமுறை சொன்னால்...** சொன்னால்..."

மதி **ஓடிவந்தாள் "என் கதிர், என் கதிர் உங்களை இழந்து, என்னை நானும் இழக்க விரும்பவில்லை!** வள்ளலாரை மட்டும்"

நினைத்துக் கொண்டு பேசாமல் சுற்றுவோம்!

**"மதி! அம்மாவும் நானும் வடிக்கும் கண்ணீர் துன்பக் கண்ணீர் இல்லை".**

**"இன்பக் கண்ணீர்!"**

என்ன கண்ணீரோ! பேசாமல் நடங்கள்!

**என்னிடம் பேசமாட்டீர்களா?**

**காய்விட்டால் எட்டு நாள் எனவில்லையா?**

எத்தனையோ எட்டுநாள் போய்விட்டன.

நான் வேலைக்குப் போகவா, வேண்டாமா?

கட்டாயம் குருகுல வேலைக்குப் போக வேண்டும். ஆணை வந்து வேலைக்குப் போவதற்கு முதல்நாள், என் அப்பா, அம்மா மூவரும் அம்மா முன் நிற்போம்! தட்டு தாம்பாளத்தோடு **பெண்ணழைப்புப் போல் அழைக்க!**

**"கதிர், அம்மாவும் நீங்களும் சுற்றி வாருங்கள்! எனக்குத் தலை சுற்றுகிறது! எப்படி கதிர் இப்படி நொடிக்கு நொடி உங்களால் மாற முடிகிறது!".**

"நீயும் மாறாமல் மாறிக் கொண்டுள்ளாய். நீயும் அம்மா முன் மகளாக நில்லாமல், பேர்த்தியாக நில்! அவர்கள் மடியில் புரள்வாய்! உனக்கு முத்தம் தந்து அவர்களும் ஒளிமுத்தாகத் திகழ்வார்கள்".

**நீங்கள் உங்கள் அப்பா அம்மாவினிடம் அப்படி உள்ளீர்களா? என்பாய்! கேட்காவிட்டாலும் நினைப்பாய்!**

**"ஒருவரோடு ஒருவரை ஒப்பிட்டுப் பேசுபவர் உளவியலோ வாழ்வியலோ அறியாதவர்!"**

"இதே வினாவை அப்பா இரண்டு நாள்களின் முன் கேட்டார். நான் சொன்ன மறுமொழியைக் கேட்டுக் **உருகிக் கண்ணீர்** வழிந்தார்".

காய்ச்சலுக்கு ஒரு மருந்தா? இளைப்புக்கு ஒரு மருந்தா? கண்ணுக்கு ஒரு மருந்தா? ஓர் ஆய்வா? ஒரே வகைக் கண்ணாடியா.

மருத்துவர்களைப் பார்! மருந்துக் கடைகளைப் பார்!

**"உங்களிடம் படிக்க வேண்டியது மிகுதி!"**

"உன்னிடம் கற்க வேண்டியது அதனினும் மிகுதி".

"உன்னோடிருந்த அல்லி உன்னைப் படித்தாளா?"

"உன்னை நான் இன்னும் முழுமையாகப் படிக்கவில்லை! முழுமையாகப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை".

**என்னிடம் எந்த ஒளிவும் இல்லை!**

**இதுவே ஒளிவின் அடையாளம்!**

கதிர் தோற்றுப் போனேன்

மதி தோற்றவர் வென்றார், நாம் பேசாததா?

ஒரு சுற்று முடித்து வீட்டுக்கு வந்தனர்.

♦♦♦

# 16. எனக்கு ஒரே ஒரு குழந்தை

கதிர் ஓய்வெடுங்கள்! என்றாள் மதி.

நீ முழுமதி, நான் எழுகதிர். **அம்மாவுக்கு நான் எடுபிடியாள்.**

**தம்பி வேண்டாம்.**

"வாய் சொல்கிறது! நான் உங்கள் கூட விளையாடும் விளையாட்டுப் பிள்ளை என்று தானே நெஞ்சம் சொல்கிறது! கூட இருப்பதைத் தானே விரும்புகிறது."

**உண்மை தம்பி!**

"சமையல் என்ன செய்யப் போகிறீர்கள்?"

சோறாக்கி, பருப்புக் குழம்பு, கீரை, மிளகுச்சாறு வைக்கப் போகிறேன்.

கீரையைக் கொடுங்கள்; வெங்காயத்தைக் கொடுங்கள்.

"கதிர் நான். என்றாள் மதி".

"உள்ளே வராதே! உன் கட்டிலில் முடங்கு! நான் **வேலைகிட்டா வெட்டி! நீ பெரிய்ய ஆசிரியர்!** அதுவும் **குருகுலத்து ஆசிரியர்! கையில் அழுக்குப் படலாமா?".**

"அம்மாவை இளமையாக்கி, என்னைக் கிழடு தட்ட வைக்கிறீர்கள்? **நல்ல வேளை 'கிழத்தி' தட்டாமல், கிழடு தட்டுவது!"**

"**ஐயோ! ஏதாவது செய்யுங்கள், நான் போகிறேன்** என்று தன் கட்டிலுக்குப் போய் விட்டாள். படுத்தவளுக்கு ஒரு பாடல் பளிச்சிட்டது!".

"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும். ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழிச் **செங்கதிரோன்** றேனையது
தன்னேர் இலாத தமிழ்"

என எண்ணிக் கொண்டு கண்ணை மூடவும் மாட்டாமல், கூட இருக்கவும் மாட்டாமல் உழன்றாள்.

"அம்மா, மதி சமைப்பாளா?"

"அவ்வளவும் அவள் செய்வாள்! நான் வேண்டாம் என்றாலும் விட மாட்டாள்!"

"சமையல் கலை அரிய கலை! கண்ணளவு, கையளவு, வேக்காட்டு அளவு, மூக்களவு, நாக்களவு, உடல்நிலை அளவு எனப் பலப்பல அளவைகளைக் கொண்ட கலை! அக்கலையைப் பெண்களுக்கே ஆக்கி அவர்கள் மற்றைத் திறமைகளைப் பாழ்படுத்தி விட்டார்கள்! ஆண்களும் சமைக்கக் கற்றிருக்க வேண்டும். ஆணும் பெண்ணும் வேறுபாடு இல்லாமல் கற்றிருக்க வேண்டும் கலை. இப்பொழுது பெண்கள் படிப்பு, வேலை என ஆகிக் கொண்டு வருவதால் ஆண்களும் சமையலைக் கொஞ்சம் ஏறிட்டுப் பார்க்கிறார்கள்".

"தம்பி, நீங்கள் அம்மாவுக்கு உதவுவீர்களா?"

"உதவப் போவேன்; உன் வேலையைப் பார் என்று சொல்லி விடுவார்கள்".

"அம்மா, வருத்தப்பட மாட்டீர்களே"

"தம்பி" என் வருத்தமெல்லாம் குழிக்குள் போய் விட்டது. சொல்லுங்கள்.

அம்மா, மதி அப்பா இருந்தால் உங்களோடு இப்படிப் பேசி, சிரித்து வருவேனா?

"புரிகிறது தம்பி!"

"நீங்கள் யார்? மதியார்? என்ன உறவு? ஏன் இப்படி உறவானோம்! என் அப்பா அம்மா இன்னார் என்பது அல்லி திருமணத்தால் தானே தெரிந்தது உங்களுக்கு! அவர்களுக்கு மதிமேலும் உங்கள் மேலும் ஏன் இந்தப் பற்றுமை?"

“என்ன படித்தாலும் இந்தத் தெளிவு யாருக்கு வரும்! அவர் இல்லாத ஏக்கத்தில் மதியை நினைத்தே வாழ்ந்தேன். அந்த மதியைப் பெற்றதால் இந்தக் கதிர்க்குழந்தை ஊட்ட உண்ணும் அம்மா ஆனேன்!”.

“தம்பி எனக்கு இனி எந்தக் கவலையும் இல்லை. இரண்டு குடும்பங்களுக்கும் நீங்கள் ஒரு பிள்ளை, மதி ஒரு பிள்ளை!”

“அம்மா உங்கள் கணக்கு வேறு; என் கணக்கு வேறு”

உங்களுக்கு இரண்டு பிள்ளை, நானும் மதியும்!

எங்கள் அப்பா அம்மாவுக்கு இரண்டு பிள்ளை, மதியும் நானும்!

எனக்கு மட்டும் ஒரே ஒரு முதிய குழந்தை தவச் செல்வி! என்னும் போது, மதி வந்தாள்!

“போட்டியம்மா வாங்க!”

“உங்கள் வரவேற்பெல்லாம் வேண்டாம். நான் கங்கை கொண்டானுக்குப் போகிறேன்”.

“ஏன்?”

“அம்மா அப்பாவினிடம், உங்களுக்கும் தெரியாமல், எனக்கும் தெரியாமல், எழுகதிர்க்கு வடலூரில் ஒரு குழந்தை இருக்கிறது. நீங்கள் அது தெரியாமல் இருந்தால் பெரிய பொல்லாப்பு ஆகிவிடும் என்று சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்! என்றாள்!”.

கதிரும் தவமும் அடக்க முடியாமல் சிரித்தனர்.

◆◆◆

# 17. ஒரு கோடி பரிசு

கதிர் அமர்ந்தான். மதி உணவுப் பொருள்களை அம்மாவுடன் சேர்ந்து எடுத்து வந்தாள்.

அம்மா, கதிர்க்கும் மதிக்கும் படைத்தார்.

கதிர்போய் ஒரு தட்டு எடுத்துக் கொண்டு வந்தான்.

"அம்மா உட்காருங்கள் என்றான் கதிர்

தயக்கத்தோடு அமர்ந்தார்".

"மதி, அம்மா என் குழந்தை. நான் அவர்க்கு முதல் ஒருவாய் ஊட்டுவேன் என்று எழுந்து ஊட்டினான்".

**என்னவன் சீ 'என்னவன்' என்று சொல்லாத மதிக்கும் யான் 'போனால் போகிறதென்று' ஒருவாய் ஊட்டுகிறேன்** என்றான்.

**மூவரும் நகைப்போடு உண்டனர்.** பேசி ஒலித்தது.

"கதிர், அப்பா பேசுகிறேன்".

"என்னப்பா"

"ஒரு நல்ல செய்தி; உனக்கு நெய்வேலி **வேலைக்கு ஆணை வந்து விட்டது!**".

"மதிக்கும் அன்று நேர்காணலிலேயே உறுதியாகிவிட்டது".

"மதிபக்கத்தில் இருக்கிறாள்".

"அவளிடம் பேசியைக் கொடு".

"மதி, கதிர்க்கு வேலை கிடைத்து விட்டது" என்றார்.

**"புகழும் தனமும் இருக்கும் இடத்தில் எல்லாமும் இருக்கும்!"**

**"புகழும் தனமும் சிறப்பது மதியால் இல்லையா?"**

"நீங்கள் மகிழ்ச்சியான செய்தி என்றதும், அம்மா வீட்டுள் போய் இனிப்பு எடுத்துக் கொண்டு வந்து விட்டார்!".

"ஒன்றும் விரைவில்லை. வேலையில் சேர இன்னும் ஐந்து நாள்கள் உள்ளன. நீயும் கூட வரலாம் இல்லையா?"

“வேலையில் சேருமுன் உங்கள் வாழ்த்துப் பெற வருகிறேன். வணக்கம்”.

“வாழ்த்து”

“கதிர் எனக்கு **மிகச் சிக்கலாக** உள்ளது”.

“கூந்தல் சிக்கலானால் **‘சிக்குவாரி’** உள்ளது. மலச்சிக்கலானால் மருந்துக் கடையில் **‘மாத்திரை’** உள்ளது. சரசரவென எழுந்து உள்ளே போய் விட்டாள்”.

பின்னே போனான் கதிர்.

**“உங்களிடம் கேட்பதற்குச், சுவரில் முட்டிக் கொள்ளலாம்!”**

**அடடா! சுவரில் முட்டாமல் என்தலையில் முட்டினால் எவ்வளவு நல்லது!”**

உங்களைக் குட்டத்தான் கை வருகிறது.

அதையாவது செய்.

ஒழுங்காகக் கேளுங்கள்!

“உங்களை **‘என்னவன்’** என்று சொல்ல வேண்டும் என்கிறீர்கள்! நீங்கள் அம்மாவை, **அம்மா** என்கிறீர்கள். அவர்கள் தம்பி என்கிறார்கள். **அது உங்கள்பாடு**! நான் உங்கள் அப்பா பேசத் தொடங்கியதும் **திணறிப்போனேன்**. ‘ஐயா’ என வாய்வரவில்லை”.

‘மாமா’ எனவும் துணிவு வரவில்லை. நான் முறை சொல்லத் தடுமாறும் **சிக்கலைக் கேட்கப் போனால், நீங்கள் இல்லாத சிக்கல்களையெல்லாம் பேசுகிறீர்கள்!**

“அம்மா முன் தானே சொன்னேன். **நம் வழக்கை அவர்களே தீர்க்கட்டும்”.**

“தம்பி, நாம் நாமாக இருப்பதில் இருபக்கமும் மகிழ்ச்சிதான்”.

மதி, உங்கள் அப்பாவை **‘மாமா’** என்பதும், உங்கள் அம்மாவை **‘மாமி’** என்பதும் தான் சரி.

"அந்த முறை தெரியாதவளா மதி".

"அவளுக்குத் தெரியும் நீங்கள் என்னை **மாமி** என்றோ, **அக்கை** என்றோ சொல்லியிருந்தால் தெளிவாகியிருக்கும். சிக்கல் இராது. ஆதலால் நீங்கள், நான் தம்பி என்பதற்குத்தக அக்கை என்னலாம் அல்லவா!".

"எனக்கு வாய் வரவில்லை! 'அம்மாமி' என்பது பழந்தமிழ்ச் சொல் அப்படிக் கூப்பிடுகிறேன்".

**'என்கதிர்' எனக்கு இது போதும்!**

"அப்பாவைக் கூப்பிடுங்கள்".

"ஏன்?"

**"சொன்னால் கூப்பிடுங்கள்!"**

அப்பாவை அழைத்தான்.

"கதிர் என்ன?"

"மதி பேச வேண்டுமாம்"

"சரி, கொடு".

"மாமா", வணக்கம்; மதி பேசுகிறேன்.

"மதி! மதி! இப்படிக் கூப்பிடுவாயா என நானும் தனமும் எதிர்பார்த்தோம்!" உங்களுக்கும் மாமிக்கும் வணக்கம். **உங்கள் மருமகளாக முறையிலும், மகளாக வாழ்விலும் இருப்பேன்.**

"அம்மாவுக்கு இசைவு தானே!"

"கதிர் வந்தாலே, அம்மா குழந்தையாகி விடுகிறார்கள், **அவர்கள் சொல்லச் சொன்ன முறை தான் இவை".**

"**தவம் தந்த தவவரம்** இது! வாழ்க!".

"மதி உள்ளே போ!"

"ஏன்?"

"சொன்னால் கேள்!"

உள்ளே போய்விட்டாள்.

"அம்மா, எனக்கு **மதியைப் பார்க்கிலும் உளைச்சல். என் அம்மாவிடம் இப்படிப் பழகியதில்லை. உணவு ஊட்டியதில்லை!**

உங்களை என் **தெய்வத்தாயாகவே** கருதுகிறேன். ஒப்புக்காக - ஊருக்காக - நான் உங்களை - **அக்கை** என்றோ **மாமி** என்றோ, **அம்மாமி** என்றோ சொல்ல எனக்கு வாய்வரவில்லை! என் அம்மாவாகவே இருங்கள்!".

**தம்பி, என் வயிற்றில் ஒரு பிள்ளை பிறந்தால், உங்கள் போல் இருக்குமா என அறியேன்! உங்கள் விருப்பப்படி 'அம்மா' என்றே கூப்பிடுங்கள்! நான் தம்பி என்றே கூப்பிடுகிறேன்.**

**"என் தங்க அம்மா"** என்று, கையைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். தன் பிள்ளை போல் தலையைத் தடவினார் தவம்!

கதவோரம் நின்று வியப்பான **'தாயையும் சேயையும்'** பார்த்துக் கொண்டிருந்தாள் மதி.

"தம்பி, அப்பாவினிடம் சொல்லிவிடுங்கள். **நாளை நாம் மூவரும் கங்கை கொண்டான் போகலாம்".**

**"ஏ ஏ, மதி! பரிசுச் சீட்டு விழுந்திருக்கிறது எனக்கு!"**

**"எவ்வளவு?"**

**"ஒருகோடி!"**

"எனக்கென்ன? உங்களுக்குப் பரிசு விழுந்தால் என்ன, விழாவிட்டால் என்ன?"

"பெற்ற தாயும் பிள்ளையும் கொண்டாடுங்கள்! நான் மூலையில் முடங்கிக் கிடக்கிறேன்!"

**இப்பொழுது உங்களோடு சேர்ந்து, அம்மாவும் எனக்குப் போட்டி ஆகி விட்டார்கள்! நீங்களே கூத்தடியுங்கள்!** அம்மா சிரித்துக் கொண்டே போனார். மதி கையைப் பிடித்து அழைத்தார்.

**"உங்கள் குழந்தை தானே 'உள்ளேபோ' என்றது!".**

"அந்தப் பிள்ளைக்கு 'வா' என்ன வாயில்லையா?"

கதிர் வந்தான்; மதியின் கையைப் பற்றினான்.

தவத்தின் முன் சென்றான். "அம்மா உங்கள் இரட்டைப் பிள்ளைகள் நாங்கள்" என்று சொல்லி இருவரும் காலில் விழுந்து வணங்கினர். தவம் இருவர் தலையையும் தொட்டு வாழ்த்தினார்.

♦♦♦

# 18. தாயும் மகளும்

காலை உணவை முடித்து மூவரும் கங்கை கொண்டான் புறப்பட்டனர்.

“மதிக்கு, அம்மா மாற்றத்தை எண்ணமுடியவில்லை. “சன்மார்க்க சபை சுற்றி வருவது, மேட்டுக்குப்பம் போவது” என்றே இருந்த அவர், நாளை மூவரும் கங்கை கொண்டான் போவோம் என்றார்! இந்தக் கதிரை நினைத்தால்! ஒரு வண்ணக் கதிராகவே உள்ளார்! அம்மா முதுமையில் இப்படி ஒரு பிள்ளை; **எந்த மாமிக்காவது இந்த வாய்ப்பு வாய்க்குமா?** அவர்களும் ஒத்துப் போகிறார்களே! அப்பா தவமணி தான்! அந்தத் தவத்தின் கொடை தான் நான்! என்னைக் காணாமலும் அம்மா இருந்தாலும் இருப்பார்; ஆனால், கதிரைக் காணாமல் இருக்கமாட்டாத தவிப்பில் உள்ளாரே! இந்தத் தாய் தவத்தாய் தான்! அதன் தவமகன் கதிர்தான்!”

கண்ணை மூடிக் கொண்டே சிந்தித்த மதியை, “மதி, நம் வீடு வந்து விட்டது இறங்கு” என்னும் கதிரின் குரல் கேட்டுத் தானே கண்ணைத் தடவினாள். விழித்தாள்!

எதிரே அல்லியும் அழகனும் நின்றனர்.

மூவரையும் வணங்கினர். அல்லி தவத்தின் பக்கம் போனாள்.

“என்ன அல்லி எதிர்பாராமல்...”

நாங்கள் முதுகுன்றம் வரவேண்டியிருந்தது. அப்படியே மாமா மாமியைப் பார்த்து விட்டுப் போகலாம் என வந்தோம். இன்னும் வீட்டுள் போகவில்லை.

புகழும் தனமும் வந்து, ‘என்ன கூடிப் பேசி வந்தீர்களா?’ என்றார் புகழ். மதி மாமி அடுக்களையில் இருப்பது அறிந்து உள்ளே போனாள்! தனம், மதியைத் தழுவினாள். “நான் என்ன செய்ய வேண்டும்!”.

**“என் மருமகளாக வர வேண்டும்!”**

நகைத்தாள்! அது தான் அம்மாவொடும், கதிரொடும் வந்து விட்டோமே!

“மாலையும் கழுத்துமாக!”

“ஓ, அப்படியா? இதோ மாலையும் கழுத்தும் என்று, **மாமி கழுத்தைச் சுற்றிக் கையைப் போட்டுத் தழுவினாள்”.**

“மாமா, பார்க்கிறார்!”

“பார்க்கட்டும் பார்க்கட்டும், **தாயும் மகளும்** என நினைப்பார்!”.

“மதி எனக்குப் பெண் பிள்ளை இல்லை என்ற ஏக்கம்! அதை நொடிப் போதில் தீர்த்து விட்டாய்!”

“என் அம்மாவுக்குப் பிள்ளையாய் வாய்த்து, ஆண் பிள்ளை இல்லை என்னும் கவலை தீர்த்தவர் உங்கள் பிள்ளை. **இது அவர் கற்பித்த பாடம்!”**

“மாமாவைப் பார்க்கிறேன்” என வந்தாள்.

மாமா பக்கம் போனாள். “என்ன மதி, மாமியோடு பேசியாயிற்றா?”

உனக்கும் கதிர்க்கும் வேலை கிடைத்தது மிக மகிழ்ச்சி!

“உங்கள் வாழ்த்துப் பெறத்தான் வந்தோம்!”

“உனக்கு வீட்டுக்கு முன்னாள் பள்ளி. நெய்வேலியானால் வண்டியேற வேண்டும். இது நாலெட்டு வைத்தால் பள்ளி. அதுவும் நீ படித்த பள்ளியாம்! எல்லாமும் நல்லதே!”.

“அம்மா அல்லி அழகன் அந்த அறையில் உள்ளனர்”.

“நான் மாமிக்கு உதவப் போகிறேன்.

தனம் வந்தார்.” எல்லா வேலையும் முடிந்தது. **அல்லி அழகன்** சாப்பிடலாம்!

“இவர்கள்....”

“நாமெல்லாம் சேர்ந்து சாப்பிடலாம். மதி அம்மாவொடு போய் இரு என்றார்”.

"அது சரிதான்" என்றார் புகழ். அல்லி அழகனை அழைத்து உண்ணச் செய்தனர். அவர்கள் உண்டு விடைபெற்றுப் போய பின், புகழ் நாம் உண்ணலாம் என்றார்.

"மாமா, மாமி வாங்க! கொஞ்சம் உட்காருவோம்! **எனக்கும் இவருக்கும் எப்போதும் போட்டி; இப்போதும் போட்டி! அந்தப் போட்டியை நீங்கள் தான் தீர்க்க வேண்டும். நான் கேட்டால், 'உன்னைக் காய் விட்டு விட்டேன்' என்கிறார்".**

**"நான் இருக்கவா? எழுந்து போகவா?"**

"உங்களுக்கும் எனக்கும் தானே வழக்கு! நீங்கள் போனால் போட்டியாள் இல்லை என்று, மாமா என்பக்கம் நல்ல தீர்ப்பு வழங்கி விடுவார்".

**"மாமா உங்களுக்கோ, மாமி உங்களுக்கோ, ஏன் எனக்கோ, தெரியாமல் இவருக்கு ஒரு குழந்தை இருக்கிறது! என் கண் முன்னால் அதற்கு உணவு ஊட்டிவிட்டார்! நான் சொல்வதை என் போட்டி, இல்லை என்று மறுக்கட்டும்!** மறுக்க முடியாத சான்றுடன் வந்துள்ளேன்".

**தவம் சிரிப்பானால் சிரித்தார்.**

**"கதிரும் துணியை வாயில் போட்டுக் கொண்டு சிரித்தான்".**

**"ஏண்டி! தம்பி பொறுப்பை நீ எடுத்துக் கொண்டாயா** என்றார் தவம்".

"அவரோடு வாழ நினைத்தால், இப்படி ஒரு சிக்கல்! வியப்பும் திகைப்பும் அடைந்தனர் புகழும் தனமும்".

சிரிப்பை அடக்கிக் கொண்டு தவம் சொன்னார்.

"தம்பி, என்னை அம்மா என்பார். நான் தம்பி என்பேன்". அக்கா, மாமி என்று கூப்பிட மனமில்லை; நாவராது! **நான் அம்மா என்றே அழைப்பேன். நான் பெற்ற பிள்ளையாக ஊட்டிவிடுவேன். 'உங்களுக்கு நாங்கள் இரண்டு பேரும் பிள்ளை; எங்களுக்கு நீங்கள் பிள்ளை'** என்று "ஊட்டிவிட்டது தம்பி". நானும் தம்பியால்

**குழந்தைபோல் ஆகிவிட்டேன்; அதைத்தான் சொல்கிறாள் என்றார். புகழும் தனமும் கைகொட்டிச் சிரித்தனர். கதிர் எழுந்தான். இரண்டாம் வழக்கு உள்ளது. ஊடே போகக் கூடாது; சொன்னால் கேட்க வேண்டும்;** கதிர் அமர்ந்தான்;

"அம்மா, கதிரை வள்ளலார் சாமியின் ஒளியாகக் காண்கிறார்கள். அதனை நூற்றுக்கு நூறும் ஏற்றுக் கொள்கிறேன். **ஏனென்றால்...** கதிரை நோக்கினாள் – **ஏனென்றால், "இவர் போடும் போட்டிக் கூத்தடிப்பைப் பள்ளியிலும் போட வேண்டாம்; வீட்டில் மட்டும் போதும் என்பதற்காகவே, ஒரே பள்ளியில் வேலை ஏற்படாமல் வெவ்வேறு பள்ளியில் வேலை கிடைக்க வள்ளலார் சாமி செய்திருக்கிறார்"** என்று சொல்ல, அனைவரும் சிரித்தனர் "மாமா மாமி அம்மா மூன்று பேரும் நில்லுங்கள் என்றாள் மதி "என் அருமைப் போட்டியே, **இந்த மூன்றும், நடமாடும் தெய்வங்கள்.** இவர்கள் அருளால் நாம் நன்றாக வாழ்ந்து,

**புகழும், தனமும், தவமும்**

பெறுவோம் என வணங்குவோம்" என்றாள்!

மதி, எங்களுக்கு வாய்த்த **'தெய்வமகள்'** நீ அம்மா! **எங்கள் வாழ்க்கையில் கண்டடையாப் பேறு, நீ எங்கள் குடும்ப விளக்காக வாய்த்தது!** என்று கூறினர். பின்னர் நீங்கள் எங்களை வாழ்த்துங்கள் என்று **புகழும் தனமும், தவத்தை வணங்கினர்! தவம் வணங்கினார்.**

அனைவரும் ஒருவருக்கொருவர் உணவை எடுத்துப் போட்டு மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டு உண்டனர்.

♦♦♦

## 19. அம்மா அருள் புரிதல் வேண்டும்

"மாமா, அம்மா உங்களிடம் ஏதோ சொல்ல வேண்டுமாம்.

புகழேந்தி வந்தார்; தனமும் வந்தார்".

"நான் தனியாள்"

"நீங்கள் தனியாள் இல்லை. அந்த எண்ணத்தை விடுங்கள். நாம் இருவரும் உடன் பிறப்புகள்! உங்களுக்கும் எனக்கும் இப்படிப் பிறப்புகள் பிள்ளையாக வாய்த்த பின்னும் தனியாள் இல்லை".

"எனக்குக் கதிரைக் காணாமல் இருக்க முடியாது. என் கதிர்த் தம்பியும் என்னை விட்டு இராது. வடலூரில் தம்பியும், மதியும் என்னோடு இருக்க வேண்டும்".

"விடுமுறை நாள்களில் கங்கை கொண்டான் வந்து கதிரும் மதியும் வந்து திரும்பலாம்".

**"கதிர், என் பிள்ளை, என் பிள்ளை....."**

"அம்மா என்று கதிர் முன் வந்து உங்கள் நிழலாக இருப்பேன்".

"உங்களைப் போல் நானும் உங்களைக் காணாமல் இருக்க மாட்டேன். **வர வர மதியும் நானாகி விட்டாள்!** அப்பா அம்மா நினைத்த போதெல்லாம் வடலூர் வரலாம். நாம் நினைத்தால் உடன் வரலாம் சொல்லுக்கு இல்லை! **என் அப்பா மெய்யான உங்கள் உடன்பிறப்பு! அம்மா அவரே தஞ்சமாக வாழ்பவள்.** அவர் முன் வாய் திறக்க மாட்டேன்! மதியோடு பழகியதால் தான் இன்று வாய் திறக்க நேர்ந்தது. இப்பொழுதும் நான் உங்களோடு தான் வரப்போகிறேன் என்றான்".

நீங்கள் உங்கள் உள்ளத்தில் ஓரெண்ணம் கொண்டு உள்ளமை எனக்குத் தெரியும்!

"அப்பா, அம்மாவுக்கு வள்ளலார் ஏற்றிய ஒளிமுன் திருமணம் நடக்க வேண்டும் என்பது".

"அம்மா சரிதானே!"

"அது தான் தம்பி!"

"அங்கே திருமணம் நம் குடும்ப அளவில் எளிமையாக நிகழ்த்தி விட்டு, கங்கை கொண்டானில் வரவேற்பு வைத்துக் கொள்ளலாம் என்பது என்றார் தவம்".

என் எண்ணமும் அது தான் என்றார் புகழேந்தி.

கதிர், மதி, தவம் மூவரும் விடைபெற்றுக் கொண்டு வடலூர்க்குப் புறப்பட்டனர்.

"மதி என்னை அப்பா முன் பேச மூட்டி விட்டாய். நான் செயயாத செயலை நீ செய்து விட்டாய்".

"கதிர் இப்படி எண்ணுங்கள்; என்னால், அம்மாவை மகிழ, நகைக்க, குழந்தையாக மாற்ற முடிந்ததா? அல்லி மணத்தால் தானே நீங்கள் அம்மாவை அறிவீர்கள்! **அந்தப் பழுத்துப் போன இலையை இளந்தளிர் ஆக்கிவிட்ட உங்களை, 'என்னவராகவே' வெளிப்படுத்தாமல் கொண்ட உணர்வு எவ்வளவு காலம் என்பதை அறிவீர்களா?".**

"நம்முள் யார் முந்தினாலும் இருவரும் முந்தியவர்களே என்று எப்பொழுது உரைத்தாயோ அப்பொழுதே நீ என்னுள் ஆகிவிட்டாய்! அது, உனக்குத் தெரியுமா?"

**"நீங்கள் பிந்திவிட்டீர்கள்! 'தோல்வி' போல் முகம் வாடியது அதற்கு முன்னா பின்னா?"**

**முன்!**

**"அதற்கு உங்களுக்கு மேல் வாடியவள் - ஏன் - அழுதவள் யான் அறிவீர்களா?"**

**"என் விருதை உங்களிடம் நான் தந்த பின் தானே, நீங்கள் உங்கள் விருதை எனக்குத் தந்தீர்கள்!".**

"கதிர், நான் வாயாடி என்கிறீர்களா?"

"இல்லை, வாயாட வில்லையே என்று ஏங்கித்தான், என் அம்மா வழியாக உனக்குப் புரியச் செய்தேன்".

**"அம்மா என்னைக் கெட்ட பிள்ளையாக நினைக்கிறீர்களா?"**

"தம்பி, என்னைக் காய் போட வைத்து விடலாம் என்று எண்ணிச் சொன்னாலும், **உங்கள் காலைத் தான் கட்டிப் பிடிப்பேன் தம்பி!"**.

**"அம்மா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்**
**ஆணவம் ஆதியமுழுதும் அறுத்துநிற்றல் வேண்டும்**
**இம்மாலைத் தத்துவங்கள் எல்லாம்என் வசத்தே**
**இயங்கியொரு தீமையும் இல்லாதிருத்தல் வேண்டும்**
எம்மான் நான் வேண்டுதல்வேண் டாமையறல் வேண்டும்
ஏகசிவ போகஅனு போகம்உறல் வேண்டும்
தம்மானத் திருவடிவில் **எந்தாயும் யானும்**
**சார்ந்துகலந் தோங்குகின்ற தன்மையும்வேண் டுவனே"**
(4085)

"தம்பியின் தலையைத் தடவி மடியில் சாய்த்துக் கொண்டார் தவம். மதி, கதிர் காலைத் தொட்டாள்!".

♦♦♦

# 20. மாமா மாமியோடு

புகழும் தனமும் அமைந்து அமர்ந்தனர்.

"மதி இருந்தபோது நம் வீடு எவ்வளவு கலகலப்பாக இருந்தது. அதுபோனபின் என்னவோ இழந்ததுபோல் உள்ளது" என்றார் தனம்.

"உண்மைதான்!"

"எந்த மருமகள், மாமி கழுத்தைக் கட்டித் தழுவுவாள்! நான் செய்ய முடிந்ததா?"

"உங்கள் அம்மா - என்மாமி - என்னைப் படுத்திய கொடுமைகளையெல்லாம் உங்களுக்காகத் தானே தாங்கிக் கொண்டிருந்தேன்."

"தனம், அம்மா வறுமை! அவர்மாமியிடம் பட்டபாடு அப்படி ஆக்கியது. அவர்படுத்தபின் நீ செய்த உதவியைப் பார்த்து "நீ என் பெற்ற பிள்ளையாக இருந்தால் கூட இப்படிச் செய்யுமா?" எனப் பாராட்டினார்களா இல்லையா?

"அதுவும் உண்மைதான்!"

"ஒவ்வொருவர் குடும்பநிலை, வளர்நிலை, சூழல், பழக்க வழக்கம், செய்யும் தொழில் - இவ்வாறு சார்ந்து, மனம் முயலாகவும், மானாகவும், குரங்காகவும் தாவித் தாவிச் செல்கிறது."

மதியும் கதிரும் கரவில்லாமல் போட்டி போட்டு உயிர்நண்புகளாக இருந்திருக்கிறார்களே? அல்லிக்கும் அழகனுக்கும் அப்படி ஏற்படவில்லையே!

உன் அம்மா என்றாவது என்னை நேர்முகம் பார்த்தார்களா? கதவில் பாதிமறைந்து தலைதாழ்ந்து, "தனம், **கதிர் நல்லா இருக்காகளா**" என்பது தானே, **வரவேற்பு, வாழ்த்து, உரையாடல் எல்லாம்**. ஆனால், கதிர் மாமியை அம்மா ஆக்கி, பிள்ளையாகி

ஊட்டுகிறானே என்றால், நாம் பெறாத பேற்றை அவர்கள் பெறுகிறார்களே என்று மகிழத்தானே வேண்டும்.

இதோ மணி ஒலிக்கிறது.....

"மாமா, மதிபேசுகிறேன்!"

"சொல்லும்மா!"

உங்கள் வாழ்த்தோட நலமாக வந்தோம். நீங்களும் மாமியும் வந்து இந்தக் கூத்தைப் பார்க்க வேண்டும்!

"ஏய், மதி, வாயை மூடு" என்று ஊடு ஒலி வருகிறது.

"நான் என் மாமா, மாமியிடம் பேசுகிறேன். உங்களுக்கென்ன?..."

"மாமா, குழந்தை அம்மா மடியில் தலைவைத்துச் சாய்ந்து கொண்டுள்ளது. அவர்களும் வெட்கம் கெட்டுத் தலையைத் தடவிக் கொண்டுள்ளார்கள்!"

**"நான் மாமி கழுத்தைக் கட்டிப் பிடித்தது தப்பா?" இந்தா மாமி கேட்டுக் கொண்டுதான் உள்ளாள்! பேசு.**

"மதி, அது தொடர்ந்து கிடைக்கவில்லையே என்று ஏக்கத்தில்தான் புலம்பிக் கொண்டுள்ளேன்."

"ஏன் மாமாவுக்கும் உங்களுக்கும் கோட்டைச் சுவர் ஊடு இருக்கிறதா? நான் அங்கே இருக்கும் மட்டும், நேருக்கு நேர் பேசவே இல்லையே!"

"அவர் மேல் உள்ள மதிப்பு! அப்படியானால் உங்களைக் கட்டிப்பிடித்து மதிப்பைக் கெடுக்கக் கூடாதல்லவா?"

"மதி எனக்கு அப்போது ஏற்பட்ட இன்பம், எங்கள் முதல் நாளில் கூட ஏற்படவில்லை அம்மா!"

"அதை மாற்றுங்கள்! அன்பை வெளிப்படுத்த வயது தடையில்லை. **வீட்டை வீடுபேற்று இன்பம் ஆக்குங்கள்.**" ஏன்,

சமைக்கும்போது மாமாவைக் கூட வைத்துப் பேசிக் கொண்டால் என்ன? நீங்கள் அவர்க்குப் போட்டு, அவர் உங்களுக்குப் போட்டு உண்டாலென்ன? பாவேந்தர் முதுமைக் காதல் என்று எழுதியிருக்கிறார். நீங்கள் மாமாவுக்குப் பிள்ளை ஆகுங்கள்! மாமா உங்களுக்குப் பிள்ளையாகட்டும்! **நான் கதிரைப் பார்த்துக் கற்றுக் கொண்ட பாடத்தை உங்களிடம் ஒப்பிக்கிறேன்.**

**இனி எளிமையா வராதும்மா?**

**நான் வரவைப்பேன்!**

மாமாவுக்கும் உங்களுக்கும் நான் மருமகள் இல்லை. மகள்! **முரண்டு பிடிப்பேன்! உங்கள் மடியில் தவழ்வேன். உங்களை என் மடியில் இழுத்துப் போடுவேன்! முத்தம் கொடுப்பேன்!**

"மாமா கேட்கிறார்களா?"

"கேட்டுக் கொண்டே புன்முறுவல் பூக்கிறார்."

**"விளையாடுகிற குழந்தைகளுக்கு இடைஞ்சல் இல்லாமல் நான் தனியே வந்து பேசுகிறேன்."**

"நீ எப்பொழுது வரப்போகிறாய்?"

"அது, மாமா மாமிபாடு" எனக்கென்ன வந்தது?

♦♦♦

# 21. தாமரைப் பொய்கை

"ஏண்டி, இதெல்லாம் சொல்கிறாய்?

மாமா மாமி – ஏதாவது அவர்களுக்குள் பேசிக் கொண்டார்களா?"

ஏன் அப்படி இருக்க வேண்டும்?

"நீ போனதும் வீடு கலகலப்பாக இல்லை" என்கிறார்.

"என் மகள் கூட இப்படிச் செய்யமாட்டாள் " என்கிறார்.

"எப்போது வருகிறாய்" என்கிறார்.

"இவருக்கு, **'நம்ம இவளே'** என்று அங்கே எண்ணமில்லை!'

"பேசினால் ஓடப் பார்க்கிறார்."

"அங்கே பேசினால் முத்து உதிர்ந்து விடுமா?"

"என்ன செய்யச் சொல்கிற?"

**உங்கள் பிள்ளையிட்டக் கேளுங்கள்.**

"முதல் நாளாவது பள்ளிக்கு என்னோடு வருமா?"

**"முதல் நாளா?"**

**"அதுதான், நம்ம முதல் நாளா?"**

**"ஐயோ! ஐயோ! அம்மாவும் சிரிக்கிறார்கள்."**

"நான் என் அம்மாவை வண்டியில் வைத்துக் கொண்டு வள்ளலார் வளாகத்தை ஒரு சுற்று அடித்து விட்டு, என் அருமைக் **'கதலியே – பலாவே – மாவே'** என்று கையைப் பிடித்துச் **'சர சர'** என்று இழுத்துக் கொண்டு போக, இப்பொழுது முதலே, என் கை ஊறத் தொடங்கிவிட்டது."

"போதும் அம்மா உங்கள் வண்டியில் ஏறுவார்களா?"

**"அதில் மூன்றாமவர் குறுக்கிட இடமில்லை!"**

"இந்த வீட்டில் நான் மூன்றாவது ஆள் இல்லையா? **அது, தற்கால முடிபு.** "

"என்ன தற்காலம் அது?"

**நாலாவது ஆள் வரும் வரை.**

**"மாமி சிரித்துக் கொண்டு போய்விட்டார்."**

**"உங்களுக்கு என்ன ஆனது?"**

"உன் மாமி சொன்ன முதல் நாளை, ஏன் எனக்குத் தரக்கூடாது.

"அம்மா உள்ளே இருக்கிறார்கள்."

"நாம் இங்கே போவோம்! எங்கள் அம்மாவுக்குத் தந்த முதல் நாளை எனக்குத்தா!"

"கன்னத்தில் அறைதான் விழும்."

"கன்னத்தில் முத்தமிட்டால் கள்வெறி கொள்ளுதடி என்பது போல, அறையை ஏற்றுக் கொள்வேன். இந்த அறைக்கும் அந்த அறை இனிக்கும்."

"பிள்ளை களைத்துப் போயிற்று என்று அம்மா சுக்குமல்லி நீர் கொண்டு வருகிறார்."

"சளைக்காமல் பேசிய உனக்குந்தான்."

"நீ ஏன்போய் எடுத்து வரக்கூடாது."

**"நான் தட்டில் ஏந்துவேன்; உங்களிடம்,"**

**"ஏன் அந்த வம்பு!"**

"அம்மா, தம்பி வண்டியில் போவீர்களா?"

**"ஏன் கங்கை கொண்டான் போகவில்லையா?"**

**"நான் மக்கு!"**

"தண்டோர் போடுகிறவனைக் கூப்பிடுகிறேன்! **'மதிமக்கு' 'மதிமக்கு'** என்று ஓங்கி ஓங்கி வடலூரார் எல்லார்க்கும் கேட்க அறை என்று சொல்லி அழைத்துக் கொண்டு வருகிறேன். **அவன் பின்னால் ஊர்வலமாக நாம் போவோம்**" என்றான் கதிர்.

"மதி குலுங்கிச் சிரிக்க, குவளையில் பாதி கொட்டிப் போயிற்று."

**"போனால் போகிறது "** என்று கதிர், அவன் குவளையில் சிறிது மல்லி சுக்கு நீர் விட்டான்.

“அம்மா, என்ன கொண்டு வந்தோம் நாம்; என்ன கொண்டு போகப் போகிறோம்”

“அப்பாவுக்கு மாடி வீடு, தோட்ட வீடு, தோட்டம், தோப்பு, வயல் - தாத்தா பாட்டியைப் பொங்கப் பொங்கப் பேணினார். அம்மாவைப் பாட்டி - ஆம் - அவர் மாமி, கொடுமைதான் செய்தார். ஆனாலும், நோய் வாய்ப்பட்டபோது **“நான் பெற்ற மகளும் இப்படிச் செய்யாது” என்று மகிழ்ந்தார்.**

“மதி, மாமியைப் பார்த்து அரவணைத்ததும் **எனக்கொரு பிள்ளை இருந்தால் இப்படி இருக்குமா?** என்றதோடு, நான் சொல்ல முடியாப் பாராட்டையும் பெற்றிருக்கிறார். அத்தகையவர்களை விட்டு விட்டு, **ஏன் உங்களைச் சுற்றுகிறேன். மதியை வம்புக் கிழுக்கிறேன்**. நமக்கு மறுபிறப்புத் தெரியாது. முந்தியதும் தெரியாது.”

**தெரிந்த பிறப்பில் உண்ணக் குறையில்லை, உடுக்கக் குறையில்லை, இருக்கக் குறையில்லை என்ற வாய்ப்பு இல்லாதவர்களும், சாலையோர மரத்தில் ஆக்கி, தெருவோரம் இருந்து மகிழ்பவர்களும் உள்ளார்கள் என்பதைப் பார்த்தாவது, நாம் கற்றுக் கொண்டால் கவலை வருமா?** நாம் சிரித்து வாழாமல், பிறரைச் சிரிக்க வைப்போமா? எங்கள் இருவரின் வேலையும் எத்தகு உயர்ந்த வேலை! ஆயிரம் ஆயிரம் பூக்கள் உள்ள **தாமரைப் பொய்கையில்** நீராடி **உலாவருவது இல்லையா? அதற்கு ஒத்திகைதான் அம்மா, நானும் மதியும் பேசுவதும் செய்வதும்.**

**“தம்பி, நான் மதியைப் பெற்றதால் பெற்ற பேறு தம்பி!** நான் ஒடுங்கிக் கிடந்தவள். “இவளுக் கென்ன கிறுக்கா” என்று யாரும் சொல்லிவிடாமல், இரவும் பகலும் உங்கள் பேச்சையும், செயலையும், கள்ளங் களங்கமிலா அன்பையும் எண்ணி எண்ணி, **நானே சிரித்துக் கொள்கிறேன்.**”

“தம்பி படிப்பு இருக்கும், பணம் இருக்கும், பதவியும் இருக்கும்; பண்பும் கூட இருக்கும் - **உங்களைப் போல இனிக்க இனிக்க வாழும் வாழ்வு இருக்குமா?**”

“அம்மா, நான் கங்கை கொண்டான் போகிறேன். மதி வேலைக்குப் போகும் முதல் நாளே வந்துவிடுகிறேன். காலையில் எழுந்து கடமையை முடித்து நீராடிவிட்டு ‘சபை’யை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வந்து, நான் **‘என் இவள்’ சுண்டு விரலை மட்டும் தொட்டு**, அழைத்துக் கொண்டு போகிறேன்.”

**“ஒரு முன்னேற்றம்!”**

“என்ன முன்னேற்றம்.”

**“முழுமதி** போய், **மதி** போய், **ஏ இவளே, இவளே** எனப்பதவி உயர்வு பெற்றுக் கொண்டு வரும் முன்னேற்றம். **என் இவள்**’ என்பது.”

“**ஏன் சுண்டு விரலைத் தொடவேண்டும்.** தொடாமல் போனால் என்ன?”

**சுண்டு விரல்... சுண்டுவிரல்.....**

**“ஐயோ என்ன சொல்வேன். அதன் பெருமையைப் போகும் போது அம்மாவினிடம் சொல்வேன்”**

“அது வரையிலும் என் மண்டையைக் குடையணும். இல்லையா?”

**“அது ஓதாக் கல்வி!”**

“தம்பி சாப்பாட்டை முடித்துச் செல்லலாமே!”

**“நீங்கள் கூடச் சாப்பிட்டால், குழந்தைக்கு ஒரு வாய் ஊட்டி விடுவீர்கள் அதற்காகத்தான்.”**

“போடி!”

“உள்ளே போய் விட்டாள்! பின்னே போனான் கதிர்! அப்பா அம்மாவும் என்னோடு வந்தாலும் வருவார்கள் என்றான்.”

“நல்ல தாயிற்று, சுண்டு விரலைத் தொடாமல் உங்கள் சுண்டுவிரல் சுண்டிப் போகும்! தப்பிப்பேன் நான்!”

“அப்படியா பார்க்கலாம்!”

“வருகிறேன் என்று விடைபெற்றான்.”

♦♦♦

# 22. சுண்டு விரல்

காலையில் அப்பா அம்மாவுடன் முதல் நாள் பள்ளிக்கு உடன்போக வந்தான் கதிர். அம்மாவும் மதியும் எதிர்பார்த்திருந்தனர். வண்டியில் ஏறி ஒரு சுற்று வந்தனர்.

ஐவரும் ஒன்றாக அமர்ந்து உண்டனர். ஊடே உணவு இருந்தது. குடிநீர் இருந்தது. உண்டுமுடித்ததும், "மதி ஆணையை எடுத்துக் கொள். அங்கே அலுவலகத்தில் ஆணையைத்தந்து ஒப்பமிட்டபின் அவர்கள் பாடத் திட்டம் தருவர்."

"அப்பா உங்கள் முன், பலகையில் இருக்கும் **திருக்குறளை** எடுத்து மதிக்குத்தந்து வாழ்த்துங்கள்" என்று கதிர் வேண்டினான். அவர் எடுத்தார்.

"மதி, அப்பா புத்தகத்தை எப்படி எடுத்தார்?"

"உற்றுப் பார்த்தாள்"

"எனக்கு எல்லாரும் எடுப்பதுபோல்தான் தெரிந்தது."

"எல்லாரும் எடுப்பது போல்தான் எடுத்தார்கள். உன் விரலை நீட்டி வாங்கினாயா, கையைவிரித்து வாங்கினாயா?"

"இருகையையும் விரித்து வாங்கினேன். 'அது நம் பண்பாடு. விரலுள் அப்பாவின் பெருவிரல் அவர்; அம்மா சுட்டு விரல், நம் அம்மா நெடுவிரல், நான் 'ஆழி' விரல்; நீ இந்தச் **சுண்டு விரல்**!" என்று அவள் விரலைத் தொட்டான். எல்லாரும் சிரித்தனர். அவளும் சிரித்தாள்!

"இந்த நான்கு விரல்களும் சேர்ந்தால்தான், அந்தப் பெருவிரலுக்கு இணை. நாம் என்றும் அவ்வாறு இணையாவோம். **இது நம் ஐவருக்கும் வள்ளலார் கண்ட ஓதாக் கல்வி**!" நால்வரும் வியந்தனர்.

"வள்ளலார் ஒளிக்கீற்றுகளுள் ஒன்று தம்பியிடம் இருக்கிறது. அவர் மறையவில்லை" என்று அம்மா சொன்னதை மெய்யாக்கி விட்டீர்கள் என்றாள் மதி!

தவச் செல்வியார் உள், நகைத்தது! புகழ், கதிர், மூவரும் பள்ளிக்குச் சென்றனர். புகழேந்தியைக் கண்டதும் தாளாளரும், தலைமையாசிரியரும் மிக மகிழ்ந்தனர்.

"முழுமதி உங்கள் உறவா" என்றனர்.

"எங்கள் மருமகள்"

"இவன் என் மகன் எழுகதிர்; நெய்வேலியில் வேலைவாய்த்துள்ளது. கங்கை கொண்டானில் தானே உள்ளீர்கள். விழாக்களின் போது தான் வருவீர்கள். மருமகள் இங்கே வேலைபார்ப்பதால் இனி நம் தொடர்பு பெருகும். மதியும் இங்கு படித்தவர் தாமே! " அங்கே தேநீர் வந்தது. புகழும் கதிரும் பருகினர். மதி நான் தேநீர் பருகுவதில்லை; வேறு ஒன்றும் வேண்டா என்றார். மதிக்குத் தலைமையாசிரியரையும் தெரிந்ததால் அவர்களுக்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லாதாயிற்று!

மதியைப் பார்த்துக் கொள்கிறோம். வீடும் வளைவுப் பக்கம்தானே! நல்லபிள்ளை! பள்ளிக்குப் பெருமை சேர்ப்பார் என்றார். விடைபெற்றுக் கொண்டு, மதியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டனர்.

வீட்டுக்கு வந்து, தேநீர் அங்கே குடித்துவிட்டோம். அவர்கள் எனக்கு நண்பானவர்கள் தாம். மதிக்கும் படித்தபள்ளி. வேலை ஆகிவிட்டது. கதிரும் சேர்வதற்கு ஆணை வந்து விட்டது.

உங்கள் எண்ணப்படியே எல்லாம் நடக்கும். உடனே விடுமுறை போடாமல் விடுமுறைக் காலம் பார்த்து நாம் நாளை உறுதி செய்து விடலாம். மதி வருமட்டும் கதிர் இருந்துபார்த்து வரட்டும். நாங்கள் புறப்படுகிறோம் என்றனர்.

தவம் வணங்கி விடை தந்தார். பகல் ஒரு மணிக்கு பள்ளி முடிந்தது. மதி மகிழ்வோடு வந்தார்.

"வகுப்பு எப்படி என்றான்" கதிர்

"பதினொன்றாம் வகுப்பில் மூன்று பிரிவு. காலையில் இரண்டு வகுப்பு, மாலையில் ஒரு வகுப்பு."

ஒன்று செய்யுள் வகுப்பு: இன்னொன்று இலக்கணம். எனக்கும் நிறைவு; பிள்ளைகளுக்கும் நிறைவு. தலைமையாசிரியர் வகுப்பு நிலையையும் என்பாடம் கற்பித்தல் நிலையையும் சற்றே நின்று கேட்டு நான் வெளியே வந்ததும் பாராட்டினார்.

எப்படித்தான் வழிகண்டு பிடிப்பீர்களோ! அப்பா அம்மா முன்னால் என்விரலைத் தொட மாட்டீர்கள் என்றால், குடும்பத்தையே விரலுக்குள் கொண்டு வந்து, ஏன் உங்கள் விரலைக் காட்டினால் என்ன, **என் விரலைத் தொட்டுத்தான் காட்டவேண்டுமா?**

“அம்மா, உன் சுண்டுவிரலைத் தொட்டுக் கூட்டிக் கொண்டு போவேன்” என்றார். ஏன் என்றேன்? அதன் பெருமையை அம்மாவினிடம் கேட்டுக் கொள் என்று சொல்லிவிட்டார்.

“என்னம்மா அது.” தவம் சிரித்தார், சொல்லாமல் சிரித்தார்.

“மணம் முடிந்ததும் மணமகன் மணமகள் இருவர் சுண்டுவிரல்களையும் இணைத்து விடுதல் வழக்கம்!”

அவள் சிரித்தாள்;

மதி, அம்மா சொன்னது நடைமுறை. நமக்குள் ஓர் இலக்கியவழக்கு. நீ யாழ்! யான் என் சுண்டுவிரலால் சுண்டுவேன்; இசைப்பாய் நீ! மூவரும் சிரித்தனர்.

♦♦♦

## 23. தேனும் பாலும் பாகும்

"தம்பி ஒன்று கேட்கிறேன்;"

நீங்கள் மதியைத் தனியே சந்தித்திருக்கிறீர்களா?

அம்மா கடந்த ஐந்தாண்டுகளாக நானும் மதியும் தனித்தனியே கல்லூரிக்குப்போய் அத்தனை பேரோடும் சந்தித்திருக்கத்தானே செய்திருக்கிறோம்.

போட்டி – பாராட்டு – களில் மட்டும் கிட்ட நின்று பார்த்திருக்கிறோம். அப்போதும் தனியாகத்தான் சந்தித்தோம். குலுங்கி குலுங்கிச் சிரித்தார்.

"தம்பி, அவளையோ உங்களையோ ஆராயக் கேட்கவில்லை."

"அப்படிக் கேட்க மாட்டீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்."

"நாங்கள் மட்டும் இருவரும் சந்தித்தது அல்லிக்காகச் சந்தித்ததுதான்! அதற்கு முன்னெல்லாம் சிந்தித்தது தான்!"

**இப்பொழுது பேசுகிற கேலி கிண்டல் எல்லாம்.**

**"என் தவத்தாயை நேரில் பார்த்தபின்தான்! அதுவும் உங்களுக்காகத் தான்"**

"அல்லியைப் பார்ப்பவர்களோடு தவிராமல் வரவேண்டும் என்று மதி சொல்ல வந்த போதுதான், 'போட்டியே வருக' என்றேன். அவளும் உங்களைப் பற்றிச் சிந்திப்பது மட்டுமில்லை என்னிடம் போட்டி பற்றி உங்களைப் பாராட்டியது தவிர, உங்கள் மேல் விருப்பம் உள்ளதாகச் சொன்னதே இல்லை."

**"அம்மா நீங்க பெற்ற பிள்ளை!"**

"நீங்கள் என் வயிற்றில் பிறக்காமல், புகழேந்தி தனம் வயிற்றில் பிறந்தது தான், **தேனும் பாலும் பாகும்** ஆயிற்று! என் வயிற்றில் பிறந்திருந்தால், நீங்கள் அண்ணன் தங்கை தாமே! அம்மா மதி பள்ளிக்குப் போக வேண்டும் போய்வரட்டும். நான் உங்களிடமும் அவளிடமும் நிறையக் கேட்க வேண்டும்."

"சரி உண்ணலாம் என்று மூவரும் அமர்ந்து உண்டனர். மதி பள்ளி சென்றாள்."

தம்பி நீங்கள் உள்ளே போய்க் கட்டிலில படுங்கள். நான் திண்ணையில் சாய்கிறேன் என்றார் தவம். பள்ளிக்குச் சென்ற மதி, முழுமதியாகவே நிறைவோடு திரும்பினாள். ஏதோ சுவையான கதைகேட்க இருக்கும் ஆவல் அவனுள் இருந்தது.

"தம்பி நானும் அவரும் உறவானது எப்படி எனக் கேட்க நினைக்கிறீர்கள்"

"ஆம் அம்மா"

"எங்களுக்கு உறவு ஒட்டு இல்லை தம்பி. அவரும் நானும் வெவ்வேறு ஊர்தான். அவர் கட்டட வேலை. நான் எடுபிடியாள். இந்த வடலூரில் தான் கட்டுமான வேலை. ஏணியில் ஏறிக்கல் கொடுத்தேன். கல்லும் சரிந்து நானும் விழுந்து அடிப்பட்டு விட்டேன். அவர்தான் என்னைத் தூக்கி மருத்துவமனை கொண்டு போனார். எனக்கு வேண்டியதை எல்லாம் செய்தார். மேட்டுக் குப்பத்தில் அவர் அம்மா இருந்தார். அவர், இவருக்கு மேல் பார்த்துக் கொண்டார். யாரோ ஒருவரைத் தேடுவதற்கு இவரையே கொள்ளலாமே என எங்கள் பெற்றோர் இசைவு பெற்று, இந்த வள்ளலார் சாமி இடத்திலேயே திருமணமும் செய்து கொண்டோம்."

இவர் தங்கமானவர். கொத்தர் கூலிவேலையாள், ஒப்பந்தக்காரர் பற்றிக் கதை கதையாகப் பேசுவார்கள். எங்கள் இருவரைப் பற்றியும் எந்தப் பேச்சுக்கும் இடமில்லாமல் வாழ்ந்து விட்டோம். இவள் நான்கு மாதமாக இருக்கும்போதே, நீ வேலைக்கு வரவேண்டாம். மாமியோடு இரு என்று சொல்லிவிட்டார்.

இங்குக் காவல் வேலை கிடைத்தது. இந்த வீடும் விலைக்கு வந்தது. வாங்கி விட்டார். மாமியும் இல்லை! நான் தனியானேன். இவள் ஒன்பது படிக்கும் போது அவரும் இல்லை. பிறகு தான் இவள் படிப்புக் கருதி வடலூர் வந்தோம்" என்றார்.

"**ஏய் என்னவளே!** உன்னைத் தூக்கித் தலைமேல் வைத்து, ஒரு சுற்றுச் சுற்றிக் கீழே போட்டு ஒரு சின்னக் காயமும் இல்லாமல் உன் கட்டிலில் போடட்டுமா? நகர்ந்தாள்; மதிகேள், என்னை,"

"அம்மா உள்ளே போய்க்கட்டிலில் படுக்கச் சொன்னார்."

"இங்கே வா, இது என்ன?"

"கீழே போர்வை விரித்துப் படுத்துள்ளீர்கள்"

"அது உன் கட்டில்"

"என் கட்டில் உங்களுக்கு ஆகாதா?"

**"நம் கட்டில் ஆகும் வரை ஆகாது!"**

"கதிர், **ஏன் இப்படி என்னைக் கொடுமைப் படுத்துகிறீர்கள்!**"

"மதி, அம்மாமுன் இல்லாமல் எப்போதாவது ஏதாவது கிண்டலா கேலியா நாம் பேசி இருக்கிறோமா? நீ பேசமாட்டாய்! நான் பேசி இருக்கிறேனா?"

தலை கவிழ்ந்தாள்.

நான் போகவா இருக்கவா?

அம்மாவும் பிள்ளையும் கங்கை கொண்டான் போங்க. நான் தனியாக் கிடக்கிறேன். அம்மாவைக் கட்டிப்பிடித்தாள்!

♦♦♦

# 24. என்னை அழவைக்காதீர்கள்

கதிர் காலையில் கங்கை கொண்டான் சென்று, சான்றிதழ்கள், வேலை ஆணை, மாற்றுடை எனப் பெட்டியோடு வந்தான். உரிய பொழுதில் சென்று, வேலையில் சேர்ந்தான். அவன் வகுப்பாசிரியன் பதினொன்றாம் வகுப்பு நான்காம் பிரிவு. கணக்கும் அவனுக்குப்பாடம் நிறைவாக முடித்து மாலையில் வந்தான். அதன்முன் மதி வந்து விட்டாள். அம்மாவும் மகளும் எதிர்பார்த்திருந்தனர்.

கதிர் வந்தான்

**“என் ஒளிவடிவே நில்லுங்கள்”** என்று சொல்லிச் சுற்றினாள் அவனை!

என்னடி என்றார் அம்மா!

அம்மா கதிரைச் சுற்றினால் தான் மதிக்கு ஒளி; அந்த ஒளிதரவேண்டி இந்தக் **கிள்ளலை, சீ.. வள்ளலைச்** சுற்றி வருகிறேன்.

“மதி வர வர நீயும் தம்பி ஆயிட்ட!”

**“பொல்லாத அம்மா, ஆக்கி வைத்து விட்டு ‘ஆயிட்ட’** என்று என்மேல் பழி!”

“அம்மா கதிரோன் ஊடாக மற்றை மதிமுதலிய கோள்கள் சுற்றி வருவது இயற்கை! அதைச் செய்கிறாள்!”

“நான் ஐந்து தானே படித்தேன். பிறகு வள்ளலார் சாமியைத் தானே படித்தேன்.”

“அம்மா நேரம் இருக்கிறது. மதி வேலைக்குப் போகுமுன் சுற்றினோம் சபையை!”

“நாம் மூவரும் என் முதல் நாள் வேலை முடித்து விட்டு வந்ததால் சுற்றி வரலாம்!”

“அந்தச் சுற்றுச் சுற்றத்தான் **‘இந்த இவ’ என்னைச் சுற்றியது, உங்கள் இருவருக்கும் உள்ளது எனக்குப் புரியலை தம்பி!”**

"என்னை வம்பில மாட்டாமல் இருந்தால், **இந்த இவருக்கு வயிற்றுவலி வந்து விடும்!"**

"மாலையாயிற்று, உட்காருங்கள்" என்று, ஒரு தட்டில் இனிப்பு காரம் கொண்டு வந்தார். அம்மா;

இரண்டு தட்டுகளை எடுத்துக் கொண்டு வந்தாள் மதி. வெந்நீர்க் குப்பியில் சுக்கு மல்லி நீரை எடுத்து வந்தாள். கதிர் உண்ணவில்லை. அம்மாவைப் பார்த்தான்.

"என்ன தம்பி?"

"உங்கள் கையால் எங்களுக்கு இனிப்பை எடுத்துத் தாருங்கள்" என்றான் கதிர்.

தவம் மனத்துள் வணங்கிக் கொண்டே 'இரண்டும் என் கண்மணிகள்' நாளெல்லாம் இனிது வாழ்க என வாழ்த்தி வழங்கினார். மூவரும் உண்டு மெல்லென நடந்தனர்.

அம்மா, 'செங்கல் சுமந்து சீரழிந்து' என்பது போல் நிகழ, அப்பா உதவ உள்ளம் ஒன்றியதை நீங்கள் சொல்ல நான் அறிந்ததுதான். இவர் அடைந்த கவலைக் கோடு ஏன் என்னைக் கலங்கவைத்தது; உருக வைத்தது. இவருக்குத் தோற்க வைத்தது; தூதுபோக வைத்தது; இவருக்கு ஆளாக வைத்தது. இவர் அறிவாரோ என்னவோ யான் அறியேன்!

"என் ஆளர் இவர் ஆனால், நீங்கள் மாமிதானே!" எந்த மாமியாவது அம்மாவாகி மடியில் தலைவைத்து படுக்க மகன்போல் தலையை வருட வாய்ப்பாரா?

இவர் அம்மாவை என் அம்மாவாக ஏற்று கழுத்தைக் கட்டி மாலைபோல் தொங்குவேனா; அப்பா பூரித்துப் பார்ப்பாரா? இவரில்லாமல் நீங்கள் இருக்க, நான் இல்லாமல் இவரம்மா இருக்க முடியாமல் தவிப்பது ஏன்?

கதிர், உங்களை நேரே கேட்கிறேன். கிண்டல் கேலி இல்லாமல் மறு மொழி எனக்குத் தருவீர்களா?

உங்களுக்கும் விடைபுரியாது; எனக்கும் விடைபுரியாது; வள்ளுவர் புரிந்திருக்கிறார்.

திகைப்போடு கதிர், மதியை நோக்கினான்;

அவள் நடந்தாள்;

**ஐந்து விரலைக் காட்டினீர்கள்; உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டீர்கள், என நான் சுருக்க முடிபு எடுப்பவள் இல்லை.**

**ஐந்து விரல்களுக்கும், ஒரே உள்ளங்கை. ஒரே உள்ளம்; ஒரே உள்ளகம்; ஒரே உள்ளகச் செய்கை; இப்படிக் குறிப்பாக விளக்கியது, நம்மிடம் செருக்கு இல்லை! சினம் இல்லை; சிறுமை இல்லை; பெருக்கம் பெருமிதமாக நடையிடுகிறது. என்பது தானே!**

**"மதி, நீ ஆசிரியைக்கு ஆசிரியை! எனக்கும் விளக்கும் பேராசிரியை!"**

**"உன் கணினி மூளைக்குத் தட்டியது எனக்குத்தட்டவில்லை. நான் மக்கு"**

**"வேண்டாம் கதிர், என்னை அழவைக்காதீர்கள்; என்னால் நடக்க முடியவில்லை நீங்களும் அம்மாவும் சுற்றி வாருங்கள். நான் இந்த மரத்தடியில் சாய்ந்திருக்கிறேன்;"**

"மதி என்று கதிர் கையைப்பற்றினான். அம்மா தோள் மேல் கை போட்டுக் கொண்டு நட; அந்தத் தவமே நமக்குத்துணை என்று நடப்போம்; எதுவும் பேசாமல் மெல்ல நடந்து வீடு சேர்ந்தனர்."

♦♦♦

## 25. எனக்குச் சொல்லத் தெரியாது

காலை அப்பா வந்தார். சனியும் ஞாயிறும் விடுமுறை. நம் தோட்ட வீட்டுக்கு எல்லாரும் போகலாம் என்றெண்ணி, அம்மா முன்னமே போய்விட்டார். மதியைப் பாராமல் இருக்க முடியவில்லையாம்; ஞாயிறு மாலை வந்து விடலாம் என்றார்.

"இரவு உணவு முடித்துப் போகலாம்" என்றார் தவம்.

தனம் எல்லாம் செய்து வைத்துக் காத்திருப்பார். எடுக்க வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டு வாருங்கள் என்றார் புகழ்.

அப்பா முன் அறையில் இருந்தார்.

மதி, கதிரை ஒருபார்வையில் அழைத்தாள்.

அமைந்து வந்தான்!

**"உங்களவள் தானே நான்! என்னை அழப்படுத்துவதில் உங்களுக்கு இன்பமா?"**

"நீங்கள் என் கட்டிலை ஒதுக்கிக் கீழே படுத்ததற்கு, **ஊமை அழுகை அழுதேன்**! வெளிக் காட்டாமல் வந்தேன்; சுற்றும்போது நீங்கள் சொல்லிய சொல் என்னைச் **சுட்டெரித்தது**; உங்களிடம் நான் 'மக்கு' என்றதற்கு நீங்கள் சொல்லிய மறுமொழி கேட்டு உங்களோடும் நகைத்தேன். ஆனால், **நீங்கள் உங்களைச் சொல்லியபோது** நான் **துடித்துப் போனேன்!"**

**"ஏன் விளையாட்டாக எடுத்துக் கொள்ளக் கூடாது."**

**"அது முடியாது!"**

**"ஏன்?"**

**"எனக்குச் சொல்லத் தெரியாது!"**

**"கையைக் கொடு!"**

"இல்லை, காலைத் தொட்டு வணங்குகிறேன்."

"தப்பித்துக் கொள்கிறாய்."

"உங்கள் 'இவள்' நான்! தப்பிக்க முடியாது என்று தெரிந்து கொண்டும் இப்பொழுது தப்பிக்கிறேன்!"

"புறப்படுவோம்! **நம் அம்மா – இல்லை – உங்கள் அம்மா,** தலை காட்டுகிறார்கள்."

"அம்மா, புறப்படலாமா? புகழேந்தி சொன்னார்;"

"அம்மாவும் பிள்ளைகளும் பின்னே இருங்கள். நான் முன்னே இருக்கிறேன், 'அப்பா' திரும்பினார். புகழேந்தி, மதி அழைத்தாள்!".

"நான் உன் அப்பா இல்லை " என்று என்னிடம் தப்பிக்கிறீர்களா? இங்கே உங்கள் மகளோடு வாருங்கள்!

வந்தமர்ந்தார் புகழ்! வண்டி தோட்ட வீடு சென்றது.

மதி பெட்டியோடு முன்னாகப் போனாள்;

**"எங்கள் அம்மாவுக்குக் குழந்தை தரும் முத்தம் என்று முத்தமிட்டாள். தனம் மதியைக் கட்டித் தழுவினாள்."**

"என்ன செய்ய வேண்டும் என்றாள்" மதி.

"உன்னைக் காண வேண்டும் என்பது தான் என் எண்ணம்."

"சரி கண்டு விட்டீர்கள் புறப்படுகிறோம்."

"உன்னைப் போலப் பேச வாய் வரவில்லை அம்மா! வண்டியில் அப்பா முன்னால் அமர்ந்தார்; "அப்பா உங்கள் மகள் பக்கம் வந்து உட்காருங்கள்" என்றேன். வந்தமர்ந்தார். அவர் அப்பா! நீங்கள்?

எனக்காக, **"முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்து என்னைப் பாடாகப் படுத்தப்போகிற என்னவரை முன்னே இருக்கச் செய்ய முடிந்ததே; உங்களோடு சேர்ந்து உங்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமானால், சனி, ஞாயிறு மற்ற விடுமுறைகளில் வருவோம்! என்னை வேலை செய்ய விடாமல் சாப்பிட்டுப் போகிற யாரோ" ஓர் ஆள் என்று நினைத்தால் நாங்கள் ஏன் வரவேண்டும்?**

"இங்கே வந்தால் '**அவர்**' வாய்க்குப் பூட்டுப் போட்டுக் கொள்வார்; என்னைத் தேடும் நீங்கள், **ஒட்ட விடுவதில்லை**; அம்மா, தவம் தவம்தான் ஒரு புன்முறுவல் – அவர் மொழியே அவ்வளவுதான்! **அப்பா, பெரியவர் நாம் அவரை மதித்து வாழ்வதுதான் வாழ்வு**!"

"அப்படியானால் நீயே படை!"

"மாட்டேன்"

"ஏன்? விடுதியானால் சமைக்க ஓராள்; வழங்க ஓராள்; திருமணப்பந்தியானால் ஆக்குபவர் – இலைபோடுபவர், தண்ணீர் வைப்பவர், தொடுகறிகள் சோறு என வைப்பவர் என வேறு வேறு."

"சமைத்த நீங்களே, எல்லோருக்கும் படையுங்கள், எல்லாக் கலங்களையும் கழுவுங்கள்; கூட்டுங்கள்; போய் முடங்குங்கள்; **வாயைச் சாப்பிடத் தவிர்த்துத் திறக்காதீர்கள்;"**

**"உன்னை என்ன சொல்கிறது, திக்கு முக்காடுகிறேன். எதுவும் தெரியாமல்** "அப்பா, விரலைத் துவைக்கவும் தெரியாத இந்தப் பச்சைக் குழந்தையோடு, எப்படி இவ்வளவு காலம் தள்ளினீர்கள்! **உங்கள் பாடு சங்கடந்தான்**" என்றாள்.

"அவர் சிரித்துக் கொண்டே போய் விட்டார்.

தவம் தலைகாட்டினார். **ஏண்டி மாமன் மாமிட்ட இந்தக் கூத்தடிக்கிற! ஐயோ ஐயோ கதிரும் நீங்களும் அடிக்காத கூத்தா?** என் முன்னால் மாமி என்று உங்களைச் சொல்லட்டும் அவர்!"

**"அது சொல்லாது;"**

"அப்படியானால் **இது செல்லாது;** போய்க்குந்துங்கள்;"

♦♦♦

# 26. என் இவளோடு பாடு

விடிகாலையில் மதி எழுந்தாள். வீட்டைக் கூட்டினாள். முற்றம் கூட்டிக் கோலமிட்டாள்; நீராடினாள்; அடுப்பு வேலைகளை முடித்தாள்; தனம் பார்வையாளியாக இருந்தாள்.

காலை உணவு அனைவரும் உண்டனர்.

அம்மா நீங்கள், உங்கள் தம்பி, நான் மூவரும் தோட்டம் தோப்பும் பார்த்து வரலாமா " என்றாள் மதி.

வெளியேறுவதில் கதிர் முன்னாக நின்றான். அம்மா புறப்பட்டார். மதி மூவரும் சென்றனர்.

தென்னந்தோப்பு, ஊடே மா, மாதுளை, கொய்யா, நெல்லி – குழாய்க் கிணறு, வயல்! எங்கும் பசுமையாக இருந்தது! ஒருபக்கம் காய்கறிச் செடி, கொடி!

"என்ன கதிர் பேசவில்லை!"

**"ஏதாவது பேச – இடக்கு மடக்கா – நினைக்க"**

**"தம்பி பேசாமல் வருகிறது எனக்குத் தெரியும், உனக்கும் தெரியும்"**

**"நீ செய்தது சரியா?"**

"என்ன சரியா?"

"தம்பியை, முன்னாலே வண்டியிலே இருக்கவைத்தது? என்னோடும் உன்னோடும் தம்பி இருந்தால் என்ன?"

"இப்போது யாரோடு இருக்கிறோம்? நாம் மூவரும் தாமே!"

**"அப்பா இருந்தால்! இந்த 'உம்மணாம் மூஞ்சி,' முன்னே இருந்தால் என்ன? பின்னே இருந்தால் என்ன? அவனே சிரித்து விட்டான்! தவமும் சிரித்து விட்டார்! அம்மா, என் அழுகைபோக்குவதற்காகக் கையை நீட்டினார், உங்கள் தம்பி!**

**நான் கையைக் கொடாமல் காலைத் தொட்டேன். அது தெரியாமல் நீங்களும் தம்பியோடு கும்மியடிக்கிறீர்கள். "**

"கதிர் சரியா, தப்பா நான் சொல்வது! ஒன்றும் சொல்லவில்லை."

"கதிர் உங்கள் ஏக்கம் போக, அம்மா முன்னால் அந்தச் செம்மலர் ஒன்றை எடுத்து, என் தலையில் வையுங்கள்! **காலில் விழுந்த எனக்கு ஏதாவது கூலி தரவேண்டாமா?"**

"அம்மா உங்க தம்பியை **வள்ளல்** என்று நினையாதீர்கள்! காசுக்கு வாங்கித் தர வேண்டாம்! இவர் தோட்டத்தில் இவ்வளவு பூக்கள் இருந்தும், ஒன்றை எடுத்து **'என் இவளாச்சே'** எனத் தலையில் வைக்க எண்ணம் வந்ததா?"

"அம்மா, ஒவ்வொரு மலரைப் பார்க்கும் போதும் எடுத்து வைக்கலாமா என எனக்கு நினைவு வரும்! இந்த **'உதறுகாலி'** என்ன செய்யுமோ என்று அடக்கி வைத்துக் கொண்டேன்" என்றான் கதிர்.

"அதற்கும் அம்மா சிரித்தார்கள். அவன் அழகிய பூவொன்றைப் பறித்து, மதியின் பின்னால் உச்சியில் வைத்தான்!"

"தம்பி, கதிர் எதைச் செய்தாலும் பொருத்தமாகத்தான் செய்யும்!"

"என்ன பொருத்தம்?"

"செங்கதிர் – செம்மலர்."

"பெரிய பொருத்தம்"

"நான் கேட்டது அது என்பதை மறந்துவிட்டீர்கள்."

"நிறத்துக்காகச் சொல்லவில்லை. பழைய நாளில் பூவைத் தலைவன் தருவது வழக்கம். இப்பொழுது பள்ளிக்குப் போகும் பிள்ளைகளுக்குத் தலைவாரிப் பூச்சூட்டி அனுப்புதல் வழக்கமாயிற்று என்று ஒருவர் சொல்லக் கேட்டேன். அதை நினைத்தே நல்ல பொருத்தம் என்றேன்."

"அம்மா நல்ல அம்மா! பொட்டிலே ஓர் அடி அடித்தார்கள் என்றான்" கதிர்.

“சரி **உதறுகாலி** என்று நீங்கள் என்னைச் சொல்லலாமா! அந்த உதறுகாலி, **உங்கள் நல்ல அம்மா தந்தது** என்று குறியாதா?”

**“நான் முன்னமே சொல்லியுள்ளேன். நம் அம்மாவை இழுக்காதே!”**

“வாயை மூடிக் கொண்டேன்” என்றாள்.

அப்பா தோப்புக்கு வருவது தெரிந்தது, தேடித்தான் வருகிறார் என மூவரும் புறப்பட்டனர்.

“நேரமாயிற்றே என வந்தேன்.”

“அப்பா தோப்பு தோட்டம் விட்டுப் போக மனம் வரவில்லை; பணம் இருக்கும் அதை இப்படி ஆக்கமாக்க முடியுமா? இதை விட்டு விட்டு எங்களோடு இவர் தங்குவது **‘தண்டிப்பதோ’ என்ற கவலையாகிறது அப்பா;**

**“அப்படி இருந்தால் தங்குவானா?”**

“மனம் கொண்ட இடம் மாளிகை இல்லையா?”

“மனம் அங்கே இருக்க, உடல் இங்கே இருப்பதுதான் தண்டனை!”

“இந்தச் சொத்தையெல்லாம் திரட்டி, உன் அன்பின் முன் வைத்தால், இது சொத்தையாகிப் போகும் அம்மா! நீங்கள் தவச்செல்வியார் கண்கள் மட்டுமல்ல; எங்கள் இருவர் கண்களும் தாம்” என்றார்.

“நாங்கள் இருவருமே பேறு பெற்றவர்கள்” என்று பேசிக் கொண்டுவர, தனம் சுக்குமல்லிப் பால் எல்லோர்க்கும் வைத்திருந்தார். பால் பருகிய புகழ், “நான் வெளியே போக வேண்டும்; இரவாகி விடும் நீங்கள் பகல் உணவை முடியுங்கள்” என்றார்.

மதி சமயலறை சென்றாள். கதிர் அப்பா இல்லாததால், மதிக்கு உதவப்போனான். தவமும் தனமும் பழங்கதை பேசினர்.

“கதிர் எப்படி உங்களிடம் ஒட்டிக் கொண்டான். எங்களோடு ஒட்டமாட்டான். எந்த வீட்டுக்கும் போக மாட்டான். யாராவது நட்பு என்று போனாலும் இரவு தங்கவே மாட்டான்” என்றாள் தனம்.

கதிரும் மதியும் போட்டி போட்டுப் படித்தவர்கள் அவர்கள் நட்பு அவ்வளவுதான். நான் வாழ்க்கையில் ஒடுங்கிப் போனவள். ஒருவர் இல்லாமல் ஒரு குடும்பம் எப்படி ஒடுங்கிப் போகிறது. அதனையும் தாங்கி, மகளுக்காக வாழும் இவர்க்குள்ள இழப்பை தீர்க்க வேண்டும் என்னும் எண்ணம் தம்பிக்கு உருக்கவடிவில் எழுந்திருக்கிறது. **‘அம்மா’** என்றது;

**“தம்பி”** என்றேன்!

“அல்லியை வாழவைக்க மதி தூது வந்தது கருதி, அவள் வாழ்வுக்கு வாய்த்த தீராக் குறையைத் தடுத்து வாழவைத்தவள் மதி என்ற எண்ணமும் சேர, **என்பிள்ளையாகவே ஆகிவிட்டது;”**

எனக்குக் கூடக்கவலை; உங்கள் இருவரையும் தெரியுமுன், பெற்றோர்கள் வழியாகச் சிக்கல் வந்தால், **மதிவாழ்வும், என்வாழ்வும் என்னாவது** எனத் தவித்தேன். உங்கள் இருவரையும் கண்டபின் நான் பட்ட துயர் எல்லாமும் ஒழிந்தன.

நானும் மதியும் இப்படிப் பேசமாட்டோம். பேசவேண்டுவது மட்டுமே பேசுவோம். **கதிரால் எங்கள் நிலை, கதிர் வழிப்பட்டதாகி இன்பச் சுரப்பாகியது.**

**இருவரிடமும் எந்தக் களங்கமும் இல்லை; பெற்றவர்களை மகிழ்விக்க நாம் மகிழ்வாதல் முதல் கடமை என்று எண்ணும் பிள்ளைகளால், நாமும் ஒத்துப் போவோமே என ஆனது தான் என் நிலை!** என்றார்.

கதிரால் நீங்கள் ஆகியதுபோல், மதியால் நாங்களும் ஆகிவிடுவோம்! **எங்கள் உறவும் முன்னை இல்லாத இன்ப அன்பு உறவாகிக் கொண்டு** வருவதை உணர்கிறோம்.

**“எம்மோ, ‘இரட்டையம்மா’, கொட்டைப்பாக்கு உடைத்து விட்டீர்களா?”**

**"கதிர் எனக்குக் கைவேலையாள்!** அப்பா புறப்பட்டதால் இந்தப் **புலிக்குட்டி,** என்பக்கம் வந்தது; என் **முயல் குட்டி**யாகச் சுற்றிச் சுற்றி வருகிறது; **பாவம் சுற்றட்டும்** என்று விட்டுவிட்டேன்."

"இருவரும் சேர்ந்து சிரித்தனர்."

**"ஒரு குறை:** வடலூராக இருந்தால், **அம்மா மடியில் தலைவைத்து இந்தக் குழந்தை கொஞ்சம்** படுத்திருக்கும்;"

தவமும் கதிரும் சிரித்துக் கொண்டனர்! கதிர், **'இவளோடு பாடு'** என்று சிரித்தான்!

**சொன்னால் சரியாகச் சொல்ல வேண்டும்! 'என் இவளோடு பாடு' என்றால், இந்தப் பெரியதுகளுக்குக் குளிரும் இல்லையா?**

**மூவரும் சிரித்தனர்!**

உங்களை நான் கவனிக்கிறேன். அப்பா வீட்டில் இல்லாததால் தான் இது என்பக்கம் வந்தது! நீங்கள் கொட்டைப் பாக்கு உடைத்தீர்கள்! **இருந்தால் யாரும் வாயைத் திறக்கமாட்டீர்கள்.**

அதென்ன **கொட்டப்பாக்கு?** என்றான் கதிர்.

'இந்தப் பெரிசுகள் கேட்டுச்சா?' **உங்களுக்கேன் கவலை!**

அப்பொழுது அப்பா வாயில் பக்கம் வந்தார்.

"அப்பா, கொட்டப்பாக்கு உடைக்கிறது என்றால் என்ன? இந்தப் **'பெரிசு'**களுக்கும், **'பொடுசு'**க்கும் சொல்லுங்கள். மூவரும் சிரித்தனர்!"

மதி கொட்டைப் பாக்கைக் கடிக்க முடியாது. தட்டி, வெட்டிப் பொடிப் பொடியாகத்தான் வெற்றிலையோடு மெல்ல முடியும்; அதையும் பல்லில்லாதவர்கள் வெற்றிலை உரலில் சுண்ணாம்பு தடவிய வெற்றிலையுள் போட்டு இடித்துக் குழைவாக்கி மெல்லுவார்கள். சிலர் வாயிலும் கடவாய்ப்பக்கம் ஒதுக்கிக் கொள்வார்கள். பழங்கதை பேசுவதைக் கொட்டைப்பாக்கு உடைத்தல் என்பது மக்கள் வழக்கு.

இப்பொழுது உடைக்கும் பொறியுள் இட்டுப் பொடியாக்கி மணப்பொருள் சேர்த்துத் தாள் பையில் அடைக்கும் ஆலைத் தொழில் ஆகிவிட்டது.

அப்பா, இந்தப் 'பெரிசுகளோ' இந்தச் 'சிறிசோ' உங்களிடம் கேட்குமா?

எல்லாரும் அமைதியாயினர்!

**அப்பா அதற்கு இவர்கள் காரணமில்லை, உங்கள் இறுக்கம். கலகலப்பாக உறவாடாமை!**

நேற்றுவந்த 'எவளோ ஒருத்தி', மாமி கழுத்தைக் கட்டிப் பிடிக்கிறேன்! அப்பா என்று உங்கள் கையைப் பிடிக்கிறேன். மாமியை வெளியே போங்கள் என்கிறேன். அப்பா மகளோடு வந்து உட்காருங்கள் என்கிறேன்.

**நீங்களாகக் கதிர் கையைப் பிடித்திருக்கிறீர்களா? நீ** பிடித்திருக்கிறாயா என்றால் அது வேறு! **அவர் என்னவர் எனக் காலம் வரும்! உங்களுக்கு அப்படி இல்லையே!** நீங்கள் வழிகாட்டாமல் உங்கள் பிள்ளை வழிகாணுமா? நீங்கள் மாமி பக்கம் போகாமல், மாமி நீங்கள் இருக்கும் இடம் வருவார்களா?

**அப்பா, நான் வாயாடி, வம்பளத்தி என நினைக்கிறீர்களா?** என்று கண்ணீர் வடித்துக் கொண்டு புகழ்கையை மதி பற்றினாள்!

தம் துண்டால் அவள் கண்ணீரைப் புகழ் துடைத்தார்!

"எப்படியோ காலம் கழித்து விட்டோம்!" என்றார் புகழ்.

ஒரு தொடர் வண்டிச்செலவில், பேருந்துச் செலவில் வாழ்நாள் உறவு ஏற்பட்டு விடுவது வாயால் தானே! ஒரு மணித்துளியில் உறவை வெட்டி விடுவதும் வாய்தானே! வாருங்கள் உங்கள் மகள் உங்களுக்குப் படைக்கப் போகிறேன் என்று உண்ணப்போயினர்.

♦♦♦

# 27. திருமணப் பரிசு

கதிர், மதி, தவம் மூவரும் ஞாயிறு மாலை வடலூர்க்கு வந்தனர். கற்பிக்கும் வேலையோடு, கட்டுரை திருத்துதல் தேர்வுத்தாள் திருத்துதல் என வேலை வீட்டிலும் செய்ய வேண்டிய தாயிற்று.

பள்ளி இலக்கியமன்றம் தமிழ் ஆங்கிலம் இரண்டற்கும் இருப்பதால் அது, அரிய சொற்பயிற்சிக் களமாயிற்று. பக்கத்துப் பள்ளி அழைப்பும் விழாவும் தொடங்கின!

பள்ளி நேரம்போக வீட்டில் மூவரும் இருக்கும்போது ஒன்றாக வேலை, ஒன்றாக உரையாடல் என இருந்தது.

தனமும் புகழும் திருமணக் கடமையிலேயே ஊன்றினர். முதற்பருவ விடுமுறை. பெரிதும் கங்கை கொண்டான் தோட்ட வீட்டில் இருந்தனர். கதிர், வள்ளலார் ஏற்றிய கண்ணாடி விளக்கை வைத்து ஓர் அறையைத் தனியே ஒதுக்கிவிட்டதால், தவமும் நிறைவடைந்தார். அவ்வறையிலேயே தங்கினார். இரவில் புகழும் தனமும் ஊருக்குள் உள்ள வீட்டுக்குப் போய்விடுவர். தைத்திங்களில் **வள்ளலார் 'சபை'முன்னர்த் திருமணம் மிக எளிமையாக நிகழ்ந்தது**. கங்கை கொண்டான் திருமண அரங்கு ஒன்றில் **வரவேற்பு நடத்தினர்.**

வழக்கமான உறவு நண்புகளோடு, தங்கள் ஆசிரியர்கள் மணமாதலால் மாணவச் செல்வங்களும் ஆசிரிய நண்பர்களும் பெருகினர். அனைவரும் எதிர்பாரா வகையில் மதி ஒலிவாங்கி முன் வந்தாள் "பெருமக்களே, என் பெயர் **முழுமதி! என்னவர் பெயர் எழுகதிர். நாங்கள் நண்பர்கள்! இனிமேல்தான் காதலிக்கப் போகிறோம்!** இங்கே இருப்பவர்களுள் காதலித்து மணந்தவர்கள், பெற்றோர்கள் பார்த்து மணங்கொண்டவர்கள் இருப்பீர்கள்!

"நீங்கள் காதலித்து மணந்திருந்தால் **அந்தக் காதலை முதுமை வர வரப் பெருக்குங்கள்!** காதல் மணமே கொண்டு வாழ்ந்த நம்மண்ணில், பெரும்பாலான காதல் மணங்கள் தோல்வி, வழக்கு, சண்டை, மணவிலக்கு எனக் காதலை மாசுபடுத்துகின்றன! **பெற்றோர் பார்த்த மணங்களாவது வெற்றி பெற்றனவா?** அதுவும் சிற்றூர்ப்

புறத்துப் படியாதவர்கள் குடும்ப உறவு வாழ்வொடு ஒப்பிட முடியாத ஒட்டா ஒட்டாகவே பெருகிக் கொண்டுள்ளது. அவர்களும் விலக்கு - மணவிலக்குப் பெறாமலே உள்ளத்தில் ஒட்டில்லா விலக்கு - அது முதிர்ந்து முறைமன்ற விலக்கு - எனப் போகவே காணமுடிகின்றது."

என்னவரும் நானும் ஆறாண்டுகளாகப் பழகிய நண்பர்களாக இருக்கிறோம். இந்நட்பு எங்களைப் புரிந்து கொள்ள வைத்தது. எங்கள் பெற்றோர்களைப் புரிய வைத்தது! எங்கள் பெற்றோர்களுக்கு எங்களைப் புரியவைத்தது! அதன்பின்தான் உங்கள் முன் மணமக்களாக நிற்க வைத்தது.

என் அம்மா எனக்கும் அம்மா, என்னவர்க்கும் அம்மா!

என்னவர் அப்பாவையும் அம்மாவையும் என் அப்பா அம்மாவாகவே கொள்கிறேன். ஆதலால், **'மாமி மருமகள்' 'மாமா மருமகள்'** எனச் சிக்கல் இல்லை! எங்கள் இருவர் 'அப்பா அம்மா' மேடைக்கு வருகிறார்கள்!

**நாங்கள் ஐவரும் ஒருகைவிரல்கள்!** இந்த விரல் **பெருவிரல்** - அது அப்பா **புகழேந்தி! எங்கள் நால்வர்க்கும் இணையான ஒருவர்.**

அடுத்த விரல் **சுட்டு விரல்** - அது அம்மா **தனம்மாள்.** அடுத்த **நடுவிரல்** - என்னம்மாவும் என்னவர் அம்மாவும் ஆன **தவச் செல்வியார்.**

அடுத்த **ஆழி விரல்** - என்னவர் **எழுகதிர்.**

அடுத்த **சுண்டுவிரல்** - நான், **முழுமதி.**

இந்த ஐந்து விரல்களும் கூடிச் சேர்ந்த அருமையோ

**"உள்ளகங் கையாகிய உள்ளங்கை - அங்கை!**
**எங்கள் உள்ளம்; எங்கள் வீடு; எங்கள் செயல் எல்லாம்! எல்லாம்"**

என்றதும் **இசை முழக்கென அவை முழங்கியது!**

**இது என் சரக்கில்லை, என் எழுகதிர் தந்த சரக்கு!**

இதை, அது சொன்னால் என்ன?

சொல்லாது!

ஏன் சொல்லாது! புகழாம் அப்பா முன் சோறுண்ணத்தான் வாய் திறக்குமே ஒழிய, ஒரு சொல்சொல்ல வாய் திறவாது! தங்கமான அப்பாவாம்! தெய்வமாம்! நெஞ்சுக்குள்ளே பஞ்சுமெத்தை போட்டுப் படுக்க வைத்து பாராட்டுவாராம்.

எழுகதிர் தலை தாழ்ந்து நகைத்தான்! மேடையில் இருந்தவர்களும் முன்னே இருந்தவர்களும் நகைத்துக் கையொலி எழுப்பினர்!

கைதட்டி நகைத்த உங்களுள் எத்தனைபேர், தோளுக்கு மிஞ்சியவன் தோழன் எனப் பழகுகிறீர்கள்! பெண்களே, நான் என் மருமகளை மகளாக நினைக்கிறேன், என்றும் மருமகள் என் மாமியை அம்மாவாக நினைத்து வாழ்கிறேன் என்றும் உள்ளவர்களை வணங்குகிறேன்! இது வரை அவ்வாறு இல்லாதவர்களை அவ்வாறு வாழுமாறு வணங்கி வேண்டுகிறேன்!

பெரும்பாலோர் தலை தாழ்ந்து சிந்தித்தனர்; ஒருவர் எழுந்தார்.

“அம்மா, நீங்கள் முழுமதிதான் அம்மா! நாங்கள் உண்ணப்போகும் உணவு எத்தனை வகை ஆனாலும், எத்தனைவகைச் சுவையானாலும் ஒருவேளை – அதுவும் – இந்த நாவில் மட்டும்தான்! நீங்கள் தந்த இந்தச் **சொல் விருந்து**, ஆண்கள் பெண்கள், வளர்ந்தவர்கள், இளையவர்கள் ஆகிய எல்லார்க்கும் **வாழ்வியல் விருந்தம்மா!**” என்றார்.

“ஐயா, உங்கள் மனம் பெரிய மனம்!”

நான் சொன்னது கேட்டு உடனே சொல்ல எழுந்தீர்களே! ஏதாவது **காசுச் செலவா? யாவர்க்குமாம் இன்னுரைதானே**” என்றாரே திருமூலர். நாமும், அப்பா அம்மாவுக்குப் பிள்ளையாக இருந்தவர்கள் தாமே! நாமும், மாமன் மாமிக்கு மருமகனாக,

மருமகளாகவிருந்தவர்கள் தாமே! என்று ஒவ்வொருவரும் எண்ணினால் சிக்கல் வருமா?

**தம்மகளுக்கு ஒன்று என்றால் துடிக்கும் தாய், மருமகளை மாறு பார்வை பார்ப்பது எதனால்? தன் தாய் என்றால் கொஞ்சும் மகள், மாமி என்றால் மிஞ்சி நடப்பது ஏன்?**

இதற்குமேல் தாயும் மகனும் சேர்ந்து கொண்டும், தந்தையும் மகனும் சேர்ந்து கொண்டும் **கூட்டுக் கொடுமை** செய்வது எத்தனை எத்தனை காவுகளை வாங்குகின்றன என்பதை நேரிலும், ஊடக வழியும் அறியாதவர்களா நாம்?

**சிந்தியுங்கள், தாம் தாம் தம்மளவில் கடைப்பிடிக்க உறுதிகொள்ளுங்கள்! உங்களுக்குக் கசப்பானது என்றால் பொறுத்துக் கொள்ளுங்கள்!** ஒரு மணித் துளி அளவில், உங்கள் வாழ்த்துப் பெற வருவோம் என்று கூறி,

எம் அப்பாவுக்கு மாலை சூட்டுகிறோம்.

எம் அம்மா இருவருக்கும் மாலை சூட்டுகிறோம்.

என்னவர் எனக்கு மாலை சூட்டுகிறார்.

நான் என்னவர்க்கு மாலை சூட்டுகிறேன் என்று சொல்லி மாலை சூட்டி அவர்களை வணங்கி, **எழுகதிரும் முழுமதியும் அவைக்கு வந்து,** ஒவ்வொருவர்க்கும் உதிரிப்பூத் தூவ, அவர்கள் வாழ்த்தப் **புத்தம் புதுவிழாவாகப் பொலிவுடன் நிகழ்ந்து விருந்துக்குச் சென்றனர்.**

ஒவ்வொருவர்க்கும் **'திருமணப் பரிசு'** என ஒரு நூல் வழங்கப்பட்டது.

**"வாழிய நலனே! வாழிய நிலனே!"**

♦♦♦



(இடமிருந்து) திருவாட்டி இலட்சுமி

கு. தாமோதரன்

திருவாட்டி பா. உஷா